# செனட்டிலிருந்து அரசாங்க தரப்பினர் வெளிநடப்பு

Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★ ★

ஈழநாடு

THE EELANADU

National Tamil Daily

தபால் பெட்டி எண் : 49
போன் : 389

மலர் 12
இதழ் 277
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் கார்த்திகை 1 றமழான் 16 திங்கட்கிழமை (16-11-70)







# ஜனவரி முதல் தொழில் வர்த்தகம் யாவும் இலங்கையருக்கே!

## டிசம்பருடன் அந்நியருக்கு இடமில்லை; பிரதமர் உத்தரவு

கொழும்பு, ஞாயிறு

வர்த்தகம் தொழில்துறைகளை இலங்கையர் மயமாக்கும் திட்டம் டிசம்பர் 31-ம் திகதியுடன் பூர்த்தியாகவேண்டுமென்று பிரதம மந்திரி கெடுவிதித்திருக்கிறார்.

இன்று இத்தகவல் அறிவிக்கப்பட்டது.

தொழில்துறைகள், வர்த்தகத்துறை முதலியவற்றை இ[illegible]கையர் மயமாக்குவதி[illegible] அரசு நிவிரமாக ஈடுபட்டிருப்பது தெரிந்ததே.

தோட்டத் துரைமாராக தொழில் புரியும் சுமார் 91 பிரிட்டிஷ்காரரும் நிர்[illegible]த் துறைகளில் பெரிய [illegible]தவிகளிலிருப்போரும் இந்தத் திட்டத்திலிருந்து விலக்களிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகின்[illegible] [illegible]ட்டு [illegible] உதவியுடனும் [illegible]

பிரதம மந்திரியின் உத்தரவின்பேரில் வெளிநாட்டவர்களுக்கு புதிய விசா வழங்குவதிலும், விசாக்களைப் புதுப்பிப்பதிலும் குடிவரவு குடி அகல்வு திணைக்களம் மிகவும் கண்டிப்பான கொள்கையைக்கடைப்பிடிக்கத் தொடங்கியிருக்கின்றது

## பத்திரிகை சுவீகரிப்புக்கு எதிராக ரூ.10,000

### யு.என்.பிக்கு வழங்கியதாக சாட்சியம்

கோட்டை, ஞாயிறு

பத்திரிகை சுவீகரிப்புக்கு எதிரான பிரசாரத்துக்கு ஐக்கிய தேசியக் கட்சிக்கு 10 ஆயிரம் ரூபாயை திரு. சிறில் மத்யூ மூலமாக வழங்கியதாக லேக்கவுஸ் டைரக்டர்கள் சபையின் தலைவர் திரு. ரஞ்சித் விஜயவர்த்தன கூறினார்.

லேக்கவுஸ் ரோயல் கமிஷன் நடத்திவரும் விசாரணையின்போதே திரு.விஜயவர்த்தன இவ்வாறு கூறினார்

பௌத்த பிக்குகளுக்குக் கொடுத்த 150 ஆயிரம் ரூபாய் பணத்துக்கு ரசீது இல்லையென்று திரு. விஜயவர்த்தன தமது சாட்சியத்தில் தெரிவித்தார்.

வெளிநாடுகளிலுள்ள வங்கிக் கணக்குப் பற்றி திரு. விஜவர்த்தனவிடம் கேட்கப்பட்டபோது இவ்வாறு கூறினார்.

திரு. எட்மண்ட் விக்கிரமசிங்கா சாட்சியமளிக்கையில், 1945-ம் ஆண்டில் அட்வக்கேட் பரீட்சையில் சித்திபெற்றவராகவும் 1948 வரை தொழில் புரிந்ததாகவும் அதன் பின்னர் லேக்கவுஸில் டைரக்டராகச் சேர்ந்ததாகவும் கூறினார்.

திரு. எல். எம். டி. சில்வாவின் கீழ் லேக்கவுஸ் ஆசிரியர் பகுதிக்கு துணை டைரக்டராகப் பணியாற்றியதாகத் தெரிவித்தார்

விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது

## "சுவீகரிக்கும் மசோதாவை வாபஸ் பெறுக"

கோட்டை, ஞாயிறு

வர்த்தக ஸ்தாபனங்களைச் சுவீகரிக்கும் மசோதாவை வாபஸ் பெறும்படி நிதி அமைச்சர் டாக்டர் என் எம் பெரேராவை கைத்தொழில் வர்த்தக கூட்டுச்சபை வற்புறுத்தியது.

இந்த மசோதா கொண்டு வரப்படவிருப்பதனால் தாம் எதிர்காலத்தில் வர்த்தக ரீதியாக நடாத்துவதற்கு உற்சாகப்படுத்துவதாக அமையவில்லையென்றும் அத்தூதுகோஷ்டி தெரிவித்தது

இது சம்பந்தமாக ஆலோசனை செய்வதாக நிதிமந்திரி டாக்டர் என் எம் பெரேரா அவர்களிடம் சொன்னார்.

## பிரதமரின் நிர்வாகத்தில்

## தேசிய [illegible] சேவை

## பல்கலைக்கழக, கட்டுப்பெத்த விவகாரம் விவாதம்

கொழும்பு, ஞாயிறு

செனட்சபையில் பல்கலைக்கழக மாணவர் அனுமதி பற்றியும், கட்டுப்பெத்த தொழில் நுட்பக் கல்லூரி மாணவர் பகிஷ்கரிப்பு சம்பந்தமாகவும் விவாதிப்பதற்கு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் முயற்சித்தபோது அரசாங்க தரப்பு செனட்டர்கள் வெளிநடப்புச்செய்தனர்.

மேற்படி விடயங்களை முன்னறிவித்தலின்றி சபையில் விவாதிப்பதை அரசாங்க தரப்பு குழுத்தலைவர் செனட்டர் ஏ. பி. ஜெயசூரியா முதலில் ஆட்சேபித்து சபையை விட்டுவெளியேறினார். அதைத் தொடர்ந்து அரசாங்க தரப்பு செனட்டர்கள் வெளிநடப்புச் செய்தனர்.

இவை சம்பந்தமான பிரேரணையை செனட்டர் விஜயமானே கொண்டுவந்தார் செனட்டர் கிச்சிலான் இதை ஆமோதித்ததைத் தொடர்ந்து செனட்டர்கள் கல்பகே, திருச்செல்வம் ஆகியோர் பல்கலைக்கழ மாணவர் அனுமதி பற்றியும், கட்டுப்பெத்தைபகிஷ்கரிப்புபற்றியும் பேசினர்.

சபையிலிருந்து தாங்கள் வெளிநடப்புச் செய்தது சம்பந்தமாக செனட்டர் றெஜிபெரேரா கூறுகையில் ஆட்சமன்ற சம்பிரதாய முறையைக் கடைப்பிடிக்க வேண்டியது அவசியம் என்றும், முன்னறிவித்தலின்றி மேற்படி விடயங்கள் விவாதத்துக்குஎடுத்துக்கொள்ளப்பட்டதைஆட்சேபிப்பதாகவும்சொன்னார்.

## இலங்கரத்தின நாடுதிரும்பினார்

கோட்டை, ஞாயிறு

சோவியத்நாடு, ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு, யுகோஸ்லவியா ஆகியநாடுகளுக்குச் சென்றிருந்த உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தக அமைச்சர் திரு. ரி. பி. இலங்கரத்தின இன்று நாடு திரும்பினார். தமது வர்த்தகப் பேச்சுவார்த்தைவெற்றியளித்துள்ளதாக அமைச்சர் வந்திறங்கியதும் கூறினார்.

யாழ். தொழில்நுட்பக் கல்லூரி

## மாணவர்கள் இன்று மட்டும் அடையாள பகிஷ்கரிப்பு

யாழ்ப்பாணம், திங்கள்

கட்டுப்பெத்த தொழில் நுட்பக்கல்லூரி மாணவர்கள் நடாத்திவரும் பகிஷ்கரிப்பு இயக்கத்தை ஆதரித்து யாழ். தொழில்நுட்பக் கல்லூரி மாணவர் மன்றம் இன்று ஒருநாள் அடையாள பகிஷ்கரிப்பு நடாத்துவதென முடிவுசெய்துள்ளது.

சங்கத்தலைவர் த.முத்துக்குமாரசாமி தலைமையில் நேற்றுமாலை நடைபெற்ற அவசரக் கூட்டத்தில் இம்முடிவு எடுக்கப்பட்டது.

இன்சூரன்ஸ கூட்டுத்தாபனம்

## கிராமந்தோறும் கிளைகள் அமைக்கும்

கொழும்பு, ஞாயிறு

இன்ஷுரன்ஸ் கூட்டுஸ்தாபனம் கிராமங்கள் தோறும் கிளைகளை அமைக்கவிருக்கிறது. அடுத்த ஆண்டு முற்பகுதியில் இத்திட்டம் [illegible]கமாகும். கிளைகளை அமைப்பதன்மூலம் கிராமங்களில் விவசாயம், கைத்தொழில் முதலியன ஊக்குவிக்கப்படுமாம்.

கிராமங்களில் இன்ஷு[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுத்த 150 ஆயிரம் ரூபாய் பணத்துக்கு ரசீது இல்லையென்று திரு. விஜய வர்த்தன தமது சாட்சியத்தில் தெரிவித்தார்.

வெளிநாடுகளிலுள்ள வங்கின் கீழ் லேக்கவுஸ் ஆசிரியர் பகுதிக்கு துணை டைரக்டராகப் பணியாற்றியதாகத் தெரிவித்தார்

விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது

டாக்டர் என் எம் பெரேரா அவர்களிடம் சொன்னார்.

...டிருப்பது தெரிந்ததே.

பாக். சூறுவளி கொடுமை

# இந்தியப்பிரதமர் ரூ. 5 லட்சம் அனுப்பினார்

புதுடில்லி, நவ. 15

கிழக்குப் பாகிஸ்தானில் ஏற்பட்ட பயங்கரச் சூறுவழியினுல் பாதிக்கப்பட்ட மக்களின் நிவாரணத்துக்கென இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி 5 லட்சம் ரூபாய் அனுப்பியுள்ளார்.

அவர் பாகிஸ்தான் ஜனுதிபதி யாஹியாகானுக்கு அனுப்பிவைத்த செய்தியில் எமது அண்டைய நாட்டில் இப்படிப்பட்டபெரும்அழிவு ஏற்பட்டிருப்பதைக் கண்டு மிகவும் வேதனை அடைகிறோம். வீடுகளையும் உடமைகளையும் இழந்து தவிக்கும் மக்களுக்கு இந்திய மக்களினதும் எனதும் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றேன் உலக மக்கள் இப்பேரழிவுகண்டு மிகவும் வேதனை அடைவார்கள் துன்பத்தில் இருக்கும் மக்கள் மிகவிரைவில் புது வாழ்வு பெறவேண்டுமென்பதே இந்திய மக்களின் பிரார்த்தனையாகும் என்று கூறியுள்ளார்.

இந்திய ஜனுதிபதி திரு. வி. வி கிரியும் தனது ஆழ்ந்த கவலையைத் தெரிவித்து அனுதாபச் செய்தி ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் குழந்தைகள் நலஸ்தாபனம் கிழக்குப் பாகிஸ்தானில் ஏற்பட்ட பேரழிவின் நிவாரண வேலைகளுக்கு நிதியுதவி அளிககவிருக்கிறது.

அமெரிக்கா இரண்டு கப்பல்களில் உணவு வகைகளும் மருந்து வகைகளும் அனுப்பி வைத்துள்ளது.

## சுதந்திரக் கட்சி வெற்றி

கொழும், ஞாயிறு

நேற்று முன்தினம் நடைபெற்ற ருகமைப் பட்டின சபைத் தேர்தலில் மொத்தம் ஐந்து வட்டாரங்களில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி நான்கு வட்டாரங்களிலும், ஐ தே கட்சி ஒரு வட்டாரத்திலும் வெற்றியீட்டியுள்ளன.

# பிரதமரின் நிர்வாகத்தில் தேசிய இளைஞர் சேவை

கொழும்பு, ஞாயிறு

தேசிய இளைஞர் சேவையைச்சேர்ந்த வாலிபர்கள் இன்று பிரதம மந்திரி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவைச் சந்தித்து தங்கள் எதிர்காலம்பற்றிப் பேசினர்.

தேசியஇளைஞர் சேவையினருக்கு தேசியப்பற்றை ஏற்படச்செய்து நாட்டின் அபிவிருத்தியில்பங்கு கொள்ளச் செய்வது என்ற திட்டம்பற்றி பிரதமர் அவர்களிடம் விளக்கினர்.

பெரிய அளவிலான வேலைத் திட்டங்கள்யாவும் தேசிய இளைஞர் சேவை மூலம் செயற்படுத்தவிருப்பதாகவும் பிரதமர் கூறினர். பெரிய வீதிகள் அமைத்தல் விவசாயம் போன்ற நாட்டின் அபிவிருத்தி முதலியவற்றுக்கு இந்த இளைஞர்களின் உதவிநாடப்படும் என்றும் அவர் சொன்னர். தேசிய இளைஞர் சேவையின் நிர்வாகம்நேரடியாகப் பிரதமரின்கீழ் இருந்துவரும் என்றும் பிரதமர் தெரிவித்தாராம்.

# விஞ்ஞானக்கல்வியினுல் எதிர் காலம் ஒளிமயமாகும்'

மட்டுவில், ஞாயிறு

''மாணவ உலகத்திற்கு இன்று அத்தியாவசியம் தேவையான சமய அறிவு ஆசாரம், ஒழுக்கம், ஆகிய பண்புகளை இந்த மகாவித்தியாலய மாணவர்கள் மத்தியில் காணும்போது நான் பெரிதும் மகிழ்ச்சியடைகிறேன். இப்படியானபண்புகளைக் கொண்ட இந்தமாணவர்களுக்கு, இந்த விஞ்ஞான ஆய்வுகூடம் பெரிதும் பயனளிக்கும்''

இவ்வாறு மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலய விஞ்ஞான ஆய்வுகூடத்தின் நிலைநிறுத்து விழாவில் கலந்துகொண்டு உரை நிகழ்த்திய வட மாநில சிரேஷ்ட கல்வி அதிகாரி திரு. ஏ. சந்திரசேகரம் கூறினர்.

மேற்படி வித்தியாலய அதிபர் ஆசிரியமணி பண்டிதர் திரு. எஸ். சிவலிங்கம் தலைமைதாங்கிய இந்த விழாவில் சிரேஷ்ட கல்வி அதிகாரி திரு. சந்திரசேகரம் தொடர்ந்து தனது உரையில் கூறியதாவது:-

இன்று விஞ்ஞானம் பல துறைகளிலும் முன்னேறிக் கொண்டிருக்கிறது. நமது மாணவர் மத்தியிலும் விஞ்ஞானக் கல்வி முன்னேற்றமடைந்து கொண்டு வருகிறது. மாணவர் விஞ்ஞான அறிவு வளர்ச்சியை முன்வைத்து நல்லதொழிற்துறை கல்வியை விருத்தி செய்வதைத் தொடர்ந்தே இன்றைய மாணவ உலகத்தின் எதிர்காலம் ஒளிமயமானதாக அமையமுடியும்.

நவீன விஞ்ஞானக் கல்வியின் துணைகொண்டு வளமான தொழிற் கல்வியை மாணவருக்கு ஊட்டுவதில் இன்றைய ஆசிரிய உலகம் நுணுக்கமான முறைகளைக் கையாளுவதின் மூலமே எதிர்காலத்தில், இன்றைய மாணவர் தமதுசமூக வாழ்க்கையிலோ சொந்த வாழ்க்கையிலோ முன்னேற்றமடைய முடியும். எனவே மாணவர்களும் தமது நுட்பமான அறிவுவளர்ச்சியை தொழிற் கல்வியை வளர்ப்பதிலேயே ஊக்கம்செலுத்த வேண்டும் என்றார்.

முருங்கன் வர்த்தகர் கொலை

# முக்கிய சாட்சி கைதான மர்மம் பற்றி விசாரணை

யாழ்ப்பாணம், திங்கள்

மூன்று வருடங்களுக்கு முன்னர் முருங்கனில் நடைபெற்ற ஒரு கொலை சம்பந்தமாக நிலவி வரும் மர்மத்தைத் துப்புத்துலக்குவதில் ஓரளவு வெற்றி கண்டுள்ள பொலிசார், இக்கொலை பற்றிய தகவல் தரக்கூடிய ஒருவர் எப்படிச் சட்டவிரோதக் குடியேற்றக்காரர் என்ற சந்தேகத்தின் மீது கைதுசெய்யப்பட்டு நாடு கடத்தப்படுவதற்காகத் தடுப்பு முகாமில் அடைக்கப்பட்டார் என்ற மர்மம் பற்றி இப்போது ஆராய்ந்து வருகின்றனர்.

முருங்கன் கடைத்தெருவிலுள்ள கடையொன்றில் கொலையுண்டு கிடந்த குரூஸ் என்ற வர்த்தகரின் கொலை சம்பந்தமாகத் துப்புத்துலக்கிய மன்னார்ப் பொலிசார் கொலைகாரர்களை விரைவில் கண்டுகொள்ளக்கூடிய தகவல்களைப் பெற்றிருப்பது பற்றிய செய்தி சில தினங்களுக்கு முன் முதன் முதலாக 'ஈழநாடு' வெளியிட்டிருந்தது வாசக நேயர்கள் அறிந்ததே

## 316,000 பரீட்சார்த்திகள் ஜி. ஸி. ஈ. (சாதாரண) பரீட்சைக்கு

கோட்டை, ஞாயிறு

டிசம்பர் மாதம் 11-ம் திகதி நடைபெறவிருக்கும் ஜி ஸி ஈ (சாதாரண) பரீட்சைக்கு 316,000பரீட்சார்த்திகள் தோற்றுகிறுர்கள்.

இவர்களில் 196,000பரீட்சார்த்திகள் பாடசாலைகள் மூலம் தோற்றுவதாக கல்வி இலாகா புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

இப்பரீட்சைக்கான கேள்வித் தாள்கள் பரீட்சை நிலையங்களுக்குக் கொண்டுசெல்வதற்கு நல்லமுறையில்பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

...துறைகளில் பெரிய ...களிலிருப்போரும் இந்தத் திட்டத்திலிருந்து விலக்களிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகின்றது.

வெளிநாட்டு மூலதன உதவியுடனும் ஆதரவுடனும் ஆரம்பிக்கப்பட்டுள்ள தொழில்துறைகள் தொடர்ந்து செயல்படுவதற்கு வசதியளிப்பதற்காக இந்தச் சலுகையாகும்.

வழங்குவதிலும், விசாக்களைப் புதுப்பிப்பதிலும் குடிவரவு குடி அகல்வு திணைக்களம் மிகவும் கண்டிப்பான கொள்கையைக்கடைப்பிடிக்கத் தொடங்கியிருக்கின்றது

இந்தக் கெடுபிடிகளினுல் இந்திய இனத்தவர்களே பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பதாக அவதானிகள் கூறுகிறுர்கள், (சி பி ஏ)

கொழும்பு, ஞாயிறு

இன்ஷூரன்ஸ் கூட்டுஸ்தாபனம் கிராமங்கள் தோறும் கிளைகளை அமைக்கவிருக்கிறது. அடுத்த ஆண்டு முற்பகுதியில் இத்திட்டம் ஆரம்பிக்கப் படவிருக்கிறது. சாதாரண கிராமமக்களையும் சேமிப்பில் ஈடுபத்துவதே கூட்டுஸ்தாபனத்தின் நோக்கமாகும். கிளைகளை அமைப்பதன்மூலம் கிராமங்களில் விவசாயம், கைத்தொழில் முதலியன ஊக்குவிக்கப் படுமாம்.

கிராமங்களில் இன்ஷூரன்ஸ் கிளைகளை அமைப்பதன்மூலம் கிராமப்புறத்திலுள்ள ஏழைகளும் விவசாயிகளும் மற்றும் தொழிலாளரும் அதிக பயனடைவரென்றும், கிராமங்கள் அபிவிருத்தி அடையுமென்றும் கூட்டுத்தாபனம் நம்பிக்கைத் தெரிவிக்கிறது.

அடுத்த ஆண்டு முற்பகுதியில் மூன்றுஇடங்களில் கிளைகள் அமைக்கப்படும். ஹிங்குராக்கொடை, அம்பலாந்தோட்டை, அம்பாறை முதலிய இடங்களில் இன்ஷூரன்ஸ் கூட்டுத்தாபனம் முதலில் கிளைகள் அமைக்கும்.

அடுத்த ஆண்டிலிருந்து பென்ஷன் பொலிஸி திட்டத்தை அமுல் நடத்தவும் கூட்டுஸ்தாபனம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

# பாகிஸ்தான் சூறுவளிக்கு லட்சம் பேர் பலி

கராச்சி, நவ 15.

கிழக்குப் பாகிஸ்தானில் ஏற்பட்ட கோரப் புயலில் இதுவரை லட்சத்துக்கும் அதிகமானேர் பலியாகியிருக்கலாமென அஞ்சப்படுகிறது. அத்துடன் ஒரு லட்சத்துக்கும் அதிகமான மக்களைக்காணவில்லையாம்,

கரையோர ஜில்லா ஒன்றில்இறந்துகிடக்கக் காணப்பட்ட 5000பேரின் சடலங்கள் மாபெரும் புதைகுழியொன்றில் புதைக்கப்பட்டன. சுமார்இரண்டாயிரத்துக்கும் அதிகமான சடலங்கள் இதேஜில்லாவில் வெள்ளத்தில் மிதந்துகொண்டிருப்பதாக செய்திகள்தெரிவித்தன.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடங்கள் பிரேதக் காடாகக்காட்சியளிக்கின்றன. விமானங்கள் மீட்புவேலையில் ஈடுபட்டுள்ளன.

(விபரம் 3ம்பக்கம்)

## அணுசோதனை தடைசெய்யக் கோரிக்கை

நியுயோர்க், நவ. 15

ஹெல்சிங்கியில் சோவியத் யூனியனுக்கும் அமெரிக்காவுக்குமிடையில் நடைபெற்றுவரும் அணு ஆராய்ச்சி குறைப்பு பற்றிய பேச்சுக்கள் வெற்றியளிக்கும் வகையில் அணு ஆயுத சோதனைகளைத் தடை செய்ய வேண்டும் என்று கூறும் தீர்மானம் ஒன்றினை ஐ. நா. சபையில் பதினெரு நாடுகள் தாக்கல் செய்துள்ளனர்.

# பொலிஸ் நேர்முகப் பரீட்சையாழ்ப்பாணத்தில்

## அநுராதபுரம் ...ரத்து

யாழ்ப்பாணம், திங்கள்

பொலிஸ் கான்ஸ்டபிள்களைத் தெரிவு செய்வதற்காக அநுராதபுரம் பொலிஸ் நிலையத்தில் நடைபெறவிருந்த வட மாகாணத்தைச் சேர்ந்த விண்ணப்பதாரர்களின் நேர்முகப்பரீட்சைகடைசி நேரத்தில் ரத்துச்செய்யப்பட்டிருப்பதாக அறியப்படுகிறது.

வழமையாக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் நடைபெற்றுவந்த இந்த நேர்முகப் பரீட்சை இம்முறை வடமத்திய மாகாணத்தில் அநுராதபுரம் பொலிஸ்நிலையத்தில் நடைபெறுமென்று அறிவிக்கப்பட்டிருந்தது. நேர்முகப் பரீட்சை இம்முறை இடமாற்றம் செய்யப்பட்டதற்கு தீவுப்பகுதிப்பிரதிநிதி திரு கா. பொ. இரத்தினம் ஆட்சேபம் தெரிவித்திருந்தாரென்பது வாசகர்களுக்கு நினைவிருக்கும்.

விண்ணப்பதாரர்களுக்கு பொலிஸ் இலாகாவால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதங்களில் அனுராதபுரத்தில் நடைபெறவிருந்த நேர்முகப்பரீட்சை ரத்துச்செய்யப்பட்டுளளதாகவும் யாழ்ப்பாணத்தில் நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# வீட்டுப் பிரச்னை: ரஷ்யக்குழு வருகிறது

கொழும்பு, ஞாயிறு

ரஷ்ய தாதுக்குழு ஒன்று சிலநாட்களுக்குள் இலங்கை வரவிருக்கிறது. கொழும்பில் நிலவிவரும் வீட்டுப் பற்றுக்குறை பற்றியும், அதனைத் தீர்க்கும் முறைகள்பற்றியும் அந்தக்குழு இலங்கை அதிகாரிகளுடன் சேர்ந்து ஆராயும்.

3 வாரங்களில் இவர்களின் அறிக்கை தயாரிக்கப்பட்டுவிடுமென்றும், இவர்களின் யோசனைகள் 5 ஆண்டுகளுக்குள் பூர்த்திசெய்யப்படும் என்றும் அமைச்சு அதிகாரி ஒருவர் கூறினர். ரத்மலானையில் இத்திட்டத்துக்கான தொழிற்சாலை ஒன்று நிறுவப்படும் என்றும்அவர்தெரிவித்தார்.

— —

## தற்காலிக பொலிஸ் நிலையம்

யாழ்ப்பாணம், திங்கள்

கரவெட்டி கிழக்கில் இரு பிரிவினருக்கிடையே ஏற்பட்ட கலவரங்களைத் தொடர்ந்து அங்குதற்காலிக பொலிஸ் நிலையம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது. தற்போது இப்பகுதியில் அமைதி நிலவி வருகிறது.

# பதிவுகாரரின் சேவை தொகுதி எம்.பி.யின்கையில்

கோட்டை, ஞாயிறு

ஒவ்வொரு தொகுதிகளிலுமுள்ள பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவுகாரர்கள் பற்றி அவ்வத்தொகுதி எம். பி. க்களின் அபிப்பிராயம் என்னவென உள்ளூராட்சிமன்ற பொது நிர்வாக உள்நாட்டு அமைச்சர் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா ஆட்சிமன்ற அங்கத்தவர்களைக் கேட்டுள்ளார்.

இதுசம்பந்தமாக மேற்படி பதிவு மா அதிபர் ஜனுப் ஹமீத் பருக் சகல எம். பி. க்களுக்கும் அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் அவர்கள் தொகுதிகளிலுள்ள பதிவுகாரர்களது சேவை நீடிக்கக் கூடியதா, அவர்கள் அப்பதவிக்குத் தகுதியானவர்களா என்பனபோன்ற பல கேள்விகள் கேட்கப்பட்டுள்ளன.

## ரஷ்யா அமைக்கும் கப்பல்தளம்

கெய்ரோ, நவ. 13

ஐக்கிய அரபுக்குடியரசில் சோவியத் யூனியன் கப்பல் தளம் ஒன்றைக்கட்டிவருவதாகச் செய்திகள் கூறுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

யக்கச்சி கிழக்கு தோட்டம் நூற்றெழுபது ஏக்கர் பத்து அல்லது கூடிய ஏக்கரைக் கொண்ட துண்டுகளாகப் பிரித்து விற்கப்படும். கண்டி ரோட், பளை. யக்கச்சி சந்தியிலிருந்து முக்காற் கட்டை. தென்னை சிறு பயிர்கள், பாற்பண்ணை, கோழிப்பண்ணைக்கு ஏற்ற நிலம். அரசாங்க சேவையிலிருந்து இளைப்பாறியவர்களுக்கு அரிய சந்தர்ப்பம். தலான்ட் இன்வெஸ்ற்மென்ற்ஸ், 6, பெரிய தெரு, யாழ்ப்பாணம் 2506

இணுவில் புகையிரத நிலையத்தில் இருந்து 200 யாருக்குள், உரும்பிராய் வீதியில், சாந்தி தோட்டத்திற்குக் கிழக்குப் பக்கமாய் உள்ள தெருப்பக்கக் காணி 7 1/2 பரப்பு விற்பனைக்குண்டு. N. மார்க்கண்டு, மாநகராட்சிமன்ற உறுப்பினர், 82/3, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். 2511

## மரண அறிவித்தல்

திரு. பேரின்பரெட்ணம் நாகலிங்கம் காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற கபிரியேற்பிள்ளையின் மருமகனும், மேரி யோசேப்பின் (ஆசிரியை O.L.R.) அன்புக் கணவரும், திருமதி அழகம்மா வில்வராஜா (ஆசிரியை சோதி வேம்படி) K. நவரட்னராஜ் (பிறின்சிப்பல் மானிப்பாய் இந்துக் கல்லூரி), ஆகியோரது தம்பியும், திருமதி இன்பராணி செல்வநாயகம், இரட்ணராஜா, வசந்தராணி, அழகேந்திரன், வத்சலா, ஜெயசீலன், செல்வக்குமார் ஆகியோரது அருமைத் தந்தையுமாவார். அன்னாரது பூதவுடல் இன்று (16-11-70) மாலை 4 மணியளவில் ஈச்சமோட்டை 16-ம் இலக்க இல்லத்திலிருந்து யாழ். கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

மேரி யோசேப்பின்

2555

யாழ்ப்பாணம், திங்கள்

புத்தளம் நில அளவை இலாகா அதிபராகக் கடமையாற்றிய திரு டீ. ஜெகனந்தன் இம்மாதம் தொடக்கம் வடமாகாண நிலஅளவைத் திணைக்களப் பகுதிக்கு அதிபராக இடமாற்றஞ் செய்யப்பட்டுள்ளார். (குவிம)

## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம் கேள்விப்பத்திர அறிவித்தல்

1971 ஆம் ஆண்டுக்கு யாழ்ப்பாண மாநகராட்சி மன்றத்தால் நடாத்தப்படும் பிரசவ விடுதிகளில் அழுக்குத் துணிகளைச் சலவை செய்வதற்குரிய கேள்விப்பத்திரங்கள் 30-11-70 ஆம் திகதி திங்கட்கிழமை நண்பகல் 12-00 மணிவரையும் என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. கேள்விப்பத்திரங்களை 29-11-70 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12-00 மணி வரையும் ரூபா 50/- வைப்புப் பணமாகவும் ரூபா 5/- கேள்விப்பத்திரப் பணமாகவும் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

3. இதன் கீழ்க் கையொப்பமிட்டிருப்பவரிடமிருந்து அல்லது மாநகராட்சி மன்றச் சுகாதார வைத்திய அதிகாரியிடமிருந்து கேள்விப்பத்திரம் பற்றிய ஏனைய சகல விபரங்களையும் நிபந்தனைகளையும் தேவையானோர் பெற்றுக்கொள்ளலாம்.

ஒப்பம்; ஏ ரி சுந்தரம்
மாநகராட்சி மன்ற
ஆணையாளர்
யாழ்ப்பாணம்.

மாநகராட்சி மன்ற
அலுவலகம்,
யாழ்ப்பாணம் 11-11-1970

2551

அம்பாறையில்

## 123,462 ஏக்கர் பயிர்ச் செய்கை நிலம்

அம்பாறை ஞாயிறு

அம்பாறை மாவட்டத்தில் 123,462 ஏக்கர் பயிர் செய்யக்கூடிய நெற்காணிகள் இருப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளது இவற்றில் 82,267 ஏக்கர் அரசாங்க அதிபரின் நிர்வாகத்தின் கீழும் 41195 ஏக்கர் ஆற்றுப்பள்ளத்தாக்கு அபிவிருத்திச் சபையின் நிர்வாகத்தின் கீழும் பிரிக்கப்பட்டுள்ளன.

அடுத்த ஆண்டு பெரும் போகத்தில் 100.000 ஏக்கரிலும் சிறுபோகத்தில் 65,514 ஏக்கரிலும் நெற்பயிர் செய்கைபண்ணப்படவிருக்கிறது.

## சங்கானைப் பட்டின சபை கேள்வி அறிவித்தல்

30-11-70-ம் திகதி பகல் 12 மணிவரை சங்கானைப் பட்டினசபைத் தலைவரால் பின்வருவனவற்றிற்கான கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

1. சாத்தனுவத்தை வீதியில் ஒரு ஐடிறிஸ் பாதையும் தொட்டியும் அமைத்தல்.
2. ஆட்டிறைச்சிக்கடை குத்தகை 1971.
3. வண்டிக்காலைக் குத்தகை 1971.
4. தெருக் குப்பைக் குத்தகை 1971
5. சாணகக்குத்தகை 1971

சாத்தனுவத்தை வீதி வேலைக்கு கேள்விப் பிணையாக ரூபா 25/-ம், ஏனையவற்றிற்கு ரூபா 10/-ம், கேள்விப்பத்திரப் பணமாக ரூபா 2/-ம் செலுத்தியதன் பேரில் கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும்

கேள்விப்பத்திரங்கள் 29- 11-70-ம் திகதிவரை வழங்கப்படும். விண்ணப்பங்கள் தனித்தனியாக உத்தியோக பூர்வமான பத்திரங்களில் சமர்ப்பிக்கப்படவேண்டும், மற்றும் விபரங்களை பட்டின சபை அலுவலகத்தில், அலுவலக நேரத்தில் அறிந்துகொள்ளலாம்.

(ஒப்பம்) சி வயிரமுத்து
தலைவர்
பட்டின சபை, சங்கானை
பட்டினசபை அலுவலகம்,
சங்கானை, 12-11-1970.
2553

## உரும்பராய்-ஊரெழு பட்டின சபை சோலைவரி நிலுவை

உரும்பராய்-ஊரெழு பட்டினசபை வரியிறுப்பாளர்களுக்கு சொந்தமான அசையும் பொருட்களை பட்டின சபை நடுக்கட்டவேண்டிய தவிர்க்கமுடியாதநிலை ஏற்பட்டுள்ளது. 1969ம் ஆண்டு 4ம் கந்தாயம் வரை ரூபா 51000/- நிலுவையாகவுள்ளபடியால் பட்டினசபை கடும் நடவடிக்கை எடுக்கவேண்டியுள்ளது. எனவே, சோலைவரி கட்டத்தவறியவர்கள் உடனடியாக பட்டின சபை அலுவலகத்தில் நிலுவைகளைச் செலுத்தி, சபையுடன் ஒத்துழைக்கும்படி தயவன்புடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

க. பத்மராசா,
தலைவர்,
பட்டின சபை,
உரும்பராய்-ஊரெழு.

ராஜா (யாழ்ப்பாணம்) தினசரி 3 காட்சிகள்
ஏ. வி. எம். ராஜன்-புஷ்பலதா சோ—மனோரமா நடித்த
செல்லப்பெண்

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### திங்கள் 16-11-70

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவ நற்சிந்தனை, 6-30 கத்தோலிக்க நற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 குரல்வகை, 8-00 நிலையஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதம்

344 மீ. அன்ட் 49 மீ.

பகல் 12-00 சித்திரகானம் 1-00 கதம்ப இசை

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 கல்வி ஒலிபரப்பு, 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 ஓடிவிளையாடு பாப்பா.

இரவு 6-10 பொலிஸ் நிகழ்ச்சி, 6-15 வயலின் 6-30 விவசாய சித்திரம், 7-00 திரைகானம், 7-15 பாட்டு, 7-45 நாடகம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9 30 உரையாடல், 10 00 நேயர் கேட்டவை 10-30 செய்தி தொகுப்பு.

## இன்றைய பலன்

கார்த்திகைமாதம் 1-ந்திகதி (16-11-70)

மேஷம்- அதிக சிந்தனை சிறிய தலையிடியைக் கொடுக்கும் உடல்நலம் பாதிக்கப்படலாம்.

ரிஷிபம்- அதிக ஆசையினால் அவஸ்தைப்படுவீர்கள் சிலர் வழக்கு விவகாரங்களில் மாட்டிக்கொள்ளலாம்.

மிதுனம்- புதிய நண்பர்களுடன் பழகுவீர்கள். இன்று ஏற்படும் தொடர்புகள் எதிர்காலத்துக்கு சிறந்த பயனை அளிக்கும்.

கடகம்- வாழ்க்கையில் கொந்தளிப்பான நிலைமை தென்படும், சிலர் புனைந்துரைகள் கேட்கவும் நேரிடும்.

சிம்மம்- அறிஞர்கள் சந்திப்பு இன்று நிகழும், அறவழியில் ஆர்வம் பிறக்கும். இன்று பொன்னான தினம்.

கன்னி- கனிவான சம்பவங்கள் இடம்பெறும். அபிப்பிராய பேதங்கள் மறைந்து பிரிந்தவர்கள் மீண்டும் இணைவர்.

துலாம்- கௌரவத்தைப் பா[illegible] கக்க[illegible] இடம்பெற[illegible] களை தொடுப்பதற்கு எதிரி[illegible]

## வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் கூடி ஆராயும்

யாழ்ப்பாணம், திங்கள்

''18 — 20 வயது எல்லையில் கல்வித் தகைமைகளை நிறைவேற்றிக்கொண்டு வேலைகள்பெற்று வாழ்க்கை நடாத்தியகாலம் மலையேறிவிட்ட நிலையில் 35-40 வயது வரையும் காத்திருந்தும் கூட வேலைவாய்ப்புவசதிகளில்லாது வாடிவதங்கும் வாலிபசக்திகளின் இரத்தக் கண்ணீரைத் துடைத்தெறியத்தக்க சூழ்நிலைகளை இன்றுவரையிலாவது உருவாக்காமலிருப்பது ஆழ்ந்த கவலையளிப்பதாகும்.''

அகில இலங்கை வேலையற்ற பட்டதாரி சங்க வட பிரதேசக்கிளை வெளியிட்டுள்ள துண்டுப்பிரசுரமொன்றில் மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

'குவிந்துகிடக்கும், உயர்ந்துகிடக்கும் அந்தஸ்து இவற்றுக்கிடையே தகுதி, தகைமைகள் தேடிக்கண்டு வாழ்வளிப்பதுதான் ஒரு சோஷலிச ஆட்சிக்கு அழகுள்ளபணியாமோ?'' என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வேலையற்ற பட்டதாரிகளின் பிரச்னைகள் குறித்து சங்கத்தின் வடபிரதேசக் கிளைத் தலைவர் திரு. கே சதானந்தன் தலைமையில் யாழ்ப்பாணம் லேக்வியூ ஹோட்டல் மேல்மாடியில் பொதுக்கூட்டமொன்றும் நடக்கவிருக்கிறது. யாழ்ப்பாணம் எம்.பி. திரு சி எக்ஸ். மாட்டின், ஊர்காவற்றுறை எம். பி. திரு. கா பொ. இரத்தினம், திரு. வி. பொன்னம்பலம், நியமன எம். பி. திரு எம் ஸி சுப்பிரமணியம், திரு. மு. சிவசிதம்பரம், தி. மா. துரைராசா, திரு. அ. விஸ்வநாதன் ஆகியோர் இக்கூட்டத்துக்கு அழைக்கப்பட்டுள்ளனர். (குவிம)

## உதைபந்தாட்டப் போட்டி

சாய்ந்தமருது, ஞாயிறு

எதிர்வரும் டிசம்பர் மாதம் 1-ம் திகதி வரும் முஸ்லிம்களின் புனித ரம்ழான் பெருநாளை முன்னிட்டு அன்றைய தினம் சம்மாந்துறை முஸ்லிம் மகா வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் உதைபந்தாட்டப் போட்டி ஒன்று நடைபெறவிருக்கிறது.

இப்போட்டியில் [illegible]கரைப்பற்று ஏஸ் விளையாட்டுக்கழகமும் நிந்தாவூர் வை. எஸ். எஸ். ஸி. கழகமும் மோதுகின்றன.

'[illegible]முயர்த்தி[illegible] தருக'

உதைபந்தாட்ட

## தெரிவு குழுவினர் வடபகுதிக்கு வருகின்றனர்

கிளிநொச்சி, ஞாயிறு

அகில இலங்கை உதைபந்தாட்டக் கழகத்தின் தெரிவுக்குழுவினர் இம்மாத இறுதியில் வடபகுதிக்கு வரவுள்ளனர்.

கிளிநொச்சி, யாழ்ப்பாணம், தெல்லிப்பளை, பருத்தித்துறை ஆகிய இடங்களில் சினேகபூர்வமான உதைபந்தாட்டப்போட்டிகளில் கலந்துகொள்ளவே இங்கு வர விருப்பதாக சங்கச்செயலாளர் திரு வீ, கே. ஆறுமுகம் தெரிவித்துள்ளார்.

இத்தெரிவுக்குழுவினர் கிளிநொச்சியில் இரண்டு சிநேகபூர்வமான ஆட்டங்களில் கலந்துகொள்வர்.

## 40 வருட ஆசிரிய சேவைக்குப்பின் ஓய்வு

யாழ்ப்பாணம், திங்கள்

நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி சுனிஷ்ட அதிபராகப் பணியாற்றிய திரு. பேரம்பலம் தம்பையா தமது அறுபதாவது வயதில் ஓய்வுபெறுகின்றார்.

40 ஆண்டுகள் ஆசிரியர் சேவையிலீடுபட்டுள்ள திரு. பேரம்பலம் கிராமாவிருத்தி கூட்டுறவுச்சங்க வளர்ச்சி ஆதியனவற்றிலும் நாட்டமுடையவர். கோப்பாய் நாவலர் பாடசாலை, கல்வியங்காடு சைவத்தமிழ் வித்தியாசாலை என்பவற்றில் நீண்டகாலமாக சேவை செய்துள்ளார். இம்மாதம் 15-ந்திகதியுடன் ஓய்வு பெறும் திரு. தம்பையாவுக்கு பெற்றோர் ஆசிரியர் சங்கம் சேவை நலம் பாராட்டு விழாவொன்றை நடாத்தவுள்ளது.

## மக்கள் குழுக்கள் உருவாகின்றன

பருத்தித்துறை, ஞாயிறு

பெற்றோர் பிரதிநிதிகளையும் ஆசிரியர் பிரதிநிதிகளையும் கொண்ட மக்கள் குழுவொன்றை உருவாக்கும் நோக்கத்துடன் இம்மாத 22-ம் திகதி மாலை நெல்லியடி மத்திய மகா வித்தியாலயப் பெற்றோர் ஆசிரியர் [illegible]

## கல்வியும் செல்வமும் மட்டும் முன்னேற்றமாகாது

கிளிநொச்சி, ஞாயிறு

''உலகநாடுகள் அனைத்தும் வளர்ச்சியடைந்து வரும் இவ்வேளையில் நமது ஈழத்திருநாடும் குறிப்பிட்டளவு அபிவிருத்தி அடைந்துவருகிறது. கல்வியும் செல்வமும் மட்டும் முன்னேற்றத்திற்கான காரணிகள் ஆகாது. கலைகளும் நாட்டின் முன்னேற்றத்தில் பெரும்பங்கைவகிக்கின்றன ஐரோப்பிய நாடுகளின் வளர்ச்சியை ஆராய்ந்தால் கலையின் முக்கியத்துவத்தை நாம் உணரமுடியும்.''

கிளிநொச்சிப் பாடசாலைகளின் கதம்பவிழாவின் உரையாற்றுகையில் கிளிநொச்சிப் பிரிவு காரியாதிகாரி திரு. யோகநாதன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் இலங்கையில் உள்ள சிங்களக் கலைஞர்கள் தமது சொந்தக்கற்பனை வளத்தைப்பயன்படுத்தியதன் பயனாக சிங்களக் கிராமியக் கலைகள் விருத்தி அடைந்துள்ளன. எமது கலைஞர்களும் சினிமாபாணியில் நாடகங்களை நெறிப்படுத்தாமல் யதார்த்த நிலையில் மேடையேற்றுவது சிறந்ததாகும். எமது நாட்டில் சகலரதும் ஒத்துழைப்புடன் ஒரு கலைப்பயிற்சி நிலையம் ஸ்தாபிப்பது இன்றியமையாதது இந்தியாவைப்போல் கர்நாடக சங்கீதத்துக்கு இங்கு தற்போது முக்கியத்துவம் கொடுப்பது மகிழ்ச்சிக்குரியது. பாடத்திட்டத்தில் அரசாங்கம் நாடகக்கலையை சேர்க்கின் மேலும் கலையுலகம் பயனடையும் என்றார்.

## தாலிக்கொடியுடன் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், திங்கள்

கரையூர் வீதியால் சென்றுகொண்டிருந்த ஒரு பெண்ணிடம் பறித்த தாலிக்கொடியை, நகைக்கடை ஒன்றில் விற்றுக்கொண்டிருந்த ஒருவரைப் பொலிஸார் நேற்று முன்தினம் கையும்மெய்யுமாகக் கைது செய்தனர்.

யாழ்ப்பாணக் குற்றத் தடுப்புப் பொலிஸ் பகுதியைச் சேர்ந்த திரு. என். ஈ. இரத்தினம், திரு. கிருஷ்ணராசா ஆகியோர் கைதுசெய்த சந்தேகநபரை மாஜிஸ்திரேட் முன்னிலையில் ஆஜர்செய்தபோது அவர் குற்றத்தை ஒப்புக்கொண்டார். நீதிபதி தீர்ப்பு வழங்குவதை 29ந் திகதிக்கு ஒத்திவைத்தார்

## கரவெட்டி கொலை வழக்கு

வல்வெட்டித்துறை, ஞாயிறு

கரவெட்டியைச் சேர்ந்த கே. வண்ணியசிங்கம், எஸ். பாலசுப்பிரமணியம் ஆகியோர் இவ்வருடம் சித்திரை மாதம் 4-ந் திகதி அதே இடத்தைச்சேர்ந்த வேலுப்பிள்ளை ராகவன் அல்லது ஆனந்தன் என்பவரை துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்ததாக பருத்தித்துறைப் பொலிசாரால் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு கே. விக்னராசா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

கிளிநொச்சி தபாற்கந்தோர் உதவிப் போஸ்ட் மாஸ்ரர் திரு. சி. சுப்பிரமணியம் கிளிநொச்சித் தபாற்கந்தோர் அதிபர் திரு. அ. கனகசுந்தரம் கொழும்பு தந்தி அலுவலகத்தைச் சேர்ந்த உத்தியோகஸ்தர் திரு. ஏச். டி ஈ. சில்வா பொலிஸ் இன்ஸ்பெக்டர் கிளப் பெர்னாண்டோ ஆகியோர் சாட்சியமளித்தபின் மேல் விசாரணை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

## விசேட முத்திரை

வெள்ளவத்தை, ஞாயிறு

கெப்பிட்டிப் பொலவின் 152-வது மரண தினத்தை முன்னிட்டு இலங்கை தபாற் தந்திப் போக்குவரத்துத் திணைக்களம் இம்மாதம் 26-ந் திகதி விசேடமுத்திரையொன்றை வெளியிடவிருக்கிறது. 15 சதம் 25 சதம் ஆகிய விலைகளில் முதல்நாள் உறைகள் விற்பனை செய்யப்படவுள்ளன.

## அபராதம்

மாவிட்டபுரம், ஞாயிறு

பாழடைந்த மண்டபத்தில் நடுநிசியில் இருந்து சூதாடிய ஐவர் சுன்னாகம் பொலிசிடம் மாட்டிக்கொண்டனர். ஏழாலை வடக்கைச் சேர்ந்த ஒரு பாழ் மண்டபத்தில் இவர்கள் சூதாடிக்கொண்டிருந்தனர். சுன்னாகம் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. எஸ். எஸ் நவரத்தினராஜா தலைமையில் சென்ற பொலிஸ் கோஷ்டியினர் இவர்களைக் கைது செய்து மல்லாகம் கிராம நீதிமன்றத்தில் ஆஜர் செய்தனர். நீதிபதி ஈ. மதியாபரணம் விசாரணை செய்து பிரஸ்தாப நபர்களுக்கு அபராதம் விதித்தார்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

பட்டுள்ளார். ((கு வி ம) விடுக்கிறது.


ராஜா (யாழ்ப்பாணம்) தினசரி 3 காட்சிகள்
ஏ. வி. எம். ராஜன்-புஷ்பலதா சோ—மனோரமா நடித்த

# செல்லப்பெண்

ராணி (யாழ்ப்பாணம்) தினசரி 3 காட்சிகள்
எம்.ஜி.ஆர்—லட்சுமி ஜெயலலிதா — அசோகன் நடித்த

# மாட்டுக்கார வேலன்

வின்ஸர் (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
ஜெமினி-சரோஜாதேவி சோ-மனோரமா நடித்த

# ஐந்து லட்சம்

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 10-00
போயா நாட்கள் 10-30 மெற்னி
கெப்பிட்டல் (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை)
தினசரி பி.ப. 2-00, மாலை 6-00, இரவு 9-30 மணி
நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் 125-வது உயர்ந்த சித்திரம்




சிவாஜிகணேசன் - செளகார்ஜானகி
அசோகன், வாணிஸ்ரீ, சிவகுமார், பாரதி
வி. நாகையா — ஜி. சகுந்தலா
மற்றும் பலர் நடித்த

# உயர்ந்த மனிதன்

கதை வசனம்: ஜாவர் சீதாராமன். பாடல்: வாலி.
இசை: எம். எஸ். விஸ்வநாதன்.


உடனடியாக பட்டின சபை அலுவலகத்தில் நிலுவைகளைச் செலுத்தி, சபையுடன் ஒத்துழைக்கும்படி தயவன்புடன் கேட்டுக் கொள்ளுகிறேன்.

க. பத்மராசா,
தலைவர்,
பட்டின சபை,
உரும்பராய்-ஊரெழு.

பட்டினசபை
அலுவலகம்,
உரும்பராய்-ஊரெழு,
உரும்பராய்
14-11-70. 2554

## புவியியல் ஆசிரியர் இல்லை

உடுப்பிட்டி, ஞாயிறு
நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் மூன்று வருடகாலமாகப் புவியியல் ஆசிரியர் எவரும் நியமிக்கப் படவில்லை.

இதுகுறித்து எதுவித நடவடிக்கையும் எடுத்ததாக இதுவரை தெரியவில்லை. இது மாணவர்களிடையே அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. இந் நிலைமை தொடர்ந்து நீடிக்குமானால் பாடசாலையில் தரம் குறையலாம் என அச்சம் கொள்ளப்படுகிறது.


## வெஸ்லிசினிமா

மானிப்பாய்
தினசரி 6-30, 9-30
போயா 2-30
ஜெய்சங்கர்—கே. ஆர். விஜயா நடித்த
பொன்னான வாழ்வு

## ஸ்ரீகாலிங்கன்

இணுவில்
தினசரி 4-45, 7-00 10-00 மணி
TRUE GRIT

REGAL
Jaffna
Daily 4-45, 7 &9-45
Poya days 4 shows
Elizabeth Taylor
in
TAMING OF THE SHREW

MANOHARA
Jaffna
Daily 2-45, 6-30, 9-45p.m
John Wayne,
Richard Widmark
in
THE ALAMO
(Scope-color)


…னி- கனிவான சம்பவங்கள் இடம்பெறும். அபிப்பிராய பேதங்கள் மறைந்து பிரிந்தவர்கள் மீண்டும் இணைவர்.

துலாம்- கௌரவத்தைப் பா…க்கக்கூடிய சம்பவம் இட…பெறலாம். தாற்றல்களை தொடுப்பதற்கு எதிரிகள் காத்திருப்பர்.

விருட்சிகம்- இதயத்தில் அமைதி குன்றும். குடும்பத்தில் சிறிய பூசல்கள் தோன்றிமறையும்.

தனுசு- விபத்திற்கும் இடமேற்படும். எதிலும் நிதானத்துடன் நடந்துகொள்ளவும். பலவழிகளிலும் பணம் செலவாகும்.

மகரம்- உள்ளப்படுதாவில் உவகை கூத்தாடும். உறவினர்கள் உதவுதற்கு முன் வருவார்கள்.

கும்பம்- தொழிலில் வெற்றி உண்டு. விருந்தினர்கள் வருகையுடன் வேடிக்கை பல உண்டு. இதயப்படுதாவின் இன்பத்தின் மின்னல்.

மீனம்- பொருள் ஈட்டுவதில் புதிய வழிகளைக் கையாளுவீர்கள். எதையும் சிறப்பாக சாதிப்பீர்கள்.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

## வேலைநிறுத்தம் செய்யப்போவதாக அறிவிப்பு

பசறை, ஞாயிறு
"இம்மாதம் 17ந் திகதி முதல் பசறை மாவட்டத்திலுள்ள எமது அங்கத்தவர்கள் பொதுவேலைநிறுத்தத்தில் குதிப்பார்கள்"

இத் தகவலை இ.தொ.கா தலைவர் திரு. எஸ். தொண்டமான் தோட்ட முதலாளிமார் சம்மேளனத்துக்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

கடந்த 21 நாட்களாக பசறை குறாப்பில் இ தொ காவைச் சேர்ந்த சுமார் 1000 தொழிலாளர்கள் 1964-ம் ஆண்டு முதல் பிள்ளைகள் பெயர் பதியாமல் இருக்கும் பிரச்னையையும், ஏனைய பிரச்னைகளையும் முன்வைத்து வேலைநிறுத்தம் மேற்கொண்டுள்ளனர்.

இப் பிரச்னையில் ஒரு சமரச முடிவு காண இ தொ கா எடுத்துக் கொண்ட முயற்சிகளுக்கு தோட்டநிர்வாகம் முட்டுக்கட்டையாக இருக்கிறது என்றும் இதனையொட்டியே தாங்களும் வேலைநிறுத்தத்தில் இறங்க முடிவுசெய்துள்ளதாகவும் திரு. தொண்டமான் தெரிவித்துள்ளார்.

இப் போட்டியில் ஆ…க…ரைப்பற்று ஏஸ் விளையாட்டுக்கழகமும் நிந்தாவூர் வை. எஸ். எஸ். ஸி. கழகமும் மோதுகின்றன.

## 'தரமுயர்த்தி… தருக'

சாய்ந்தமருது, ஞாயிறு
சாய்ந்தமருது உபதபால் நிலையத்தைத் தரமுயர்த்தி அதில் கடமையாற்ற சேவகன் ஒருவரும் நியமிக்க வேண்டுமென தபால் தந்தித் தொடர்புத் துறை அமைச்சர் திரு செல்லையா குமாரசூரியர் கல்முனை எம் பி, ஜனுப் எம். சி. அகமது தபால்மா அதிபர் ஆகியோர்களைக் கோரவேண்டுமென்ற தீர்மானம் கரைவாகு தெற்கு (சாய்ந்தமருது) கி. ச, வின் மாதாந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது

## வள்ளி திருமணம்

வல்வெட்டித்துறை, ஞாயிறு
தொண்டமானாறுசெல்வச் சந்நிதி கோவிலில் வள்ளி திருமணத் திருவிழா இம் மாதம் 19-ந் திகதி வியாழக்கிழமை நடைபெறவிருக்கிறது. இவ்விழா செ பொன்னுத்துரை ஐயரால் நடத்திவைக்கப்படும்,

## புதிய நிர்வாகிகள்

கொடிகாமம், ஞாயிறு
தென்மராட்சி கிழக்கு முன்னேற்றக் கழகத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் பின்வருவோர் நிர்வாகக்குழு உறுப்பினராகளாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: செல்வன் மு. சிவகுரு உபதலைவர்கள்: செல்வன் க. பொன்னுத்துரை, செல்வன் செ. நடராசா பொதுச்செயலாளர்: செல்வன் சி. சிவஞானம், தனாதிகாரி: செல்வன் சி கணேசன்.

## டிஸ்பென்சர்கள் யாழ். கிளை

சுழிபுரம், ஞாயிறு
அரசாங்க டிஸ்பென்ஸர்கள் சங்கத்தின் யாழ்ப்பாணக்கிளையின் விசேட பொதுக் கூட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட புதிய நிர்வாகிகள் வருமாறு:

தலைவர்: கே. பொன்னுத்துரை. உபதலைவர்: வி.எஸ். துரைராசா. காரியதரிசி: எம். கந்தசாமி. உபகாரியதரிசி: என். கந்தசாமி. தனாதிகாரி: எஸ். கந்தசாமி. உபதனாதிகாரி: எஸ். தனபாலசிங்கம். நிர்வாகசபை உறுப்பினர்கள்: ஏ. செந்தில்நாயகம், வி. துரைசிங்கம், எஸ். ராசதுரை.

பருத்தித்துறை, ஞாயிறு
பெற்றார் பிரதிநிதிகளையும் ஆசிரியர் பிரதிநிதிகளையும் கொண்ட மக்கள் குழுவொன்றை உருவாக்கும் நோக்கத்துடன் இம்மாத 22-ம் திகதி மாலை நெல்லியடி மத்திய மகா வித்தியாலயப் பெற்றார் ஆசிரியர் சங்கப்பொதுக்கூட்டம் கூட்டப்படுகிறது.

பரந்தன் இரசாயனத் தொழிற்சாலைக்கான தொழிலாளர் குழு உருவாக்கப் படுவதற்கு முதற்படியாக வாக்காளர் இடாப்புகள் தயாரிக்கப்பட்டுவிட்டன. பத்துப்பேரைக் கொண்ட இந்த மக்கள் குழுத்தெரிவுக்காக வாக்காளரின் ஆதரவை நாட வேட்பாளர் ஆரம்பித்துள்ளனர்.

கிருஷ்ணராசா ஆகியோர் கைதுசெய்த சந்தேகநபரை மாஜிஸ்திரேட் முன்னிலையில் ஆஜர்செய்தபோது அவர் குற்றத்தை ஒப்புக்கொண்டார். நீதிபதி தீர்ப்பு வழங்குவதை 29ந் திகதிக்கு ஒத்திவைத்தார்.

ரத்தினராஜா தலைமையில் சென்ற பொலிஸ் கோஷ்டியினர் இவர்களைக் கைதுசெய்து மல்லாகம் கிராம நீதிமன்றத்தில் ஆஜர் செய்தனர். நீதிபதி ஈ. மதியாபரணம் விசாரணை செய்து பிரஸ்தாப நபர்களுக்கு அபராதம் விதித்தார்


For Revision and Final Remedial Correction
MODEL ENGLISH PAPERS
G. C. E. (O/L)
prepared by
experienced teachers of English
on the pattern of the December '69 paper
Set of 5 full papers (Parts I & II) Rs. 2/-
SRI KANTHA PRESS
213, K. K. S. Road, Jaffna. 2552

# தற்பொழுது அச்சில்

★ ஈழநாடு தினக்குறிப்பு 1971
★ Eelanadu Pocket Diary 1971
★ கலண்டர் 1971

1971-ம் ஆண்டுக்குரிய 'ஈழநாடு' தினக்குறிப்பில் புதிய அம்சங்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

★ புதிய அரசாங்கம் பற்றிய தகவல்கள்.
★ சரித்திர சம்பந்தமான விடயங்கள்.
★ புவியியல், பொது அறிவு, விஞ்ஞானம் ஆகியவற்றிற்குரிய குறிப்புகள்.
★ போயா, அரசாங்க, வங்கி, வர்த்தக விடுமுறைகள் ஆகியன தினக்குறிப்பில் விசேடமாக இடம்பெற்றுள்ளன.

வியாபாரிகளுக்கு விசேட கழிவு கொடுக்கப்படும்

விபரங்களுக்கு: தினக்குறிப்பு 1971
'ஈழநாடு'
தபாற்பெட்டி எண்: 49, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கி. பாக். சூறாவளிக்கு ஒரு லட்சம் பேர் பலி?

## நவகாளியில் மாத்திரம் 11 ஆயிரம் சடலங்கள் மீட்பு

## மரக்கிளைகளில் பிணங்கள் தொங்கும் பரிதாபம்

கராச்சி, நவம்பர் 15

கடந்த இரு தினங்களாக கிழக்குப் பாகிஸ்தானில் வீசிய சூறாவளியால் ஒரு லட்சத்துக்கும் மேலானவர்கள் உயிர் இழந்திருக்கலாமென அஞ்சப்படுவதாக பாகிஸ்தான் வானொலி அறிவித்தது. நவகாளி ஜில்லாவில் மட்டும் 11 ஆயிரம் பேரின் சடலங்கள் மீட்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. நூற்றுக்கணக்கான தீவுகள் முற்றாக அழிந்திருக்கலாமென நம்பப்படுகிறது. ஹாட்டியா தீவு மிகமோசமாகப் பாதிக்கப்பட்ட தீவுகளில் ஒன்றாகும். குல்னா மாகாணத்திலுள்ள இந்து ஆலயத்துக்குச் சென்ற யாத்திரீகர்களில் பெரும்பான்மையினர் இறந்திருக்கலாமென அஞ்சப்படுகிறது.

கடந்த சில நாட்களுக்கு முன் வங்காள விரிகுடாவில் தோன்றிய சூறாவளி கிழக்குப் பாகிஸ்தானில் 120 மைல் வேகத்தில் அடித்தது இதோடு வெள்ளப்பெருக்கும் கடல்கொந்தளிப்பும் ஏற்பட்டது. இதனால் கிழக்குப் பாகிஸ்தானில் ஒரு லட்சத்துக்கு மேற்பட்டவர்கள் உயிர் இழந்திருக்கலாமென அஞ்சப்படுகிறது..

கங்கை டெல்டா நவகாளிப் பகுதியில் மட்டும் 11 ஆயிரம் பேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளதாக கிழக்குப் பாகிஸ்தான் கவர்னரின் உத்தியோகபூர்வமான செய்திகள் தெரிவித்தன, மற்றும் இதோடு தொடர்புடைய தீவுகளில் 10 ஆயிரம் பேர் இறந்திருக்கலாமென நம்பப்படுகிறது ஹாட்டியா தீவு மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட தீவுகளில் ஒன்றாகும், துக்லா தீவில் கணிசமானவர்கள் இறந்திருக்கலாமென நம்பப்படுகிறது

கடந்த வியாழக்கிழமை குல்னா மாகாணத்தில் இந்து ஆலயத்தில் நடக்கவிருந்த திருவிழா நடைபெறவில்லை

...கள் வெள்ளத்தில் மிதந்து செல்கின்றன. கிழக்குப் பாகிஸ்தானில் நடந்த மிக மோசமான சோகச் சம்பவமாகும் இது! 1965ம் ஆண்டில் பாகிஸ்தானில் ஏற்பட்ட சூறாவளியால் 20 ஆயிரம் மக்கள் உயிரிழந்தனர். அந்த அழிவைவிட, இது பன்மடங்கு உள்ளத்தை உருக்கும் மிகக் கொடிய சம்பவமாகும்.

சில தீவுகள் முற்றாக அழிந்துவிட்டனவாம். பாதிக்கப்பட்ட தீவுகளிடையே தொலைபேசித் தொடர்புகளும் மற்றும் தொடர்புகளும் சீர்குலைந்துள்ளன.

பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு அரசாங்கம், கப்பல் மூலமும், ஹெலிகாப்டர் மூலமும், குடிநீர், உணவு வகைகள், மருத்துவ வசதிகளை அனுப்பிவைத்துள்ளது. பாதிக்கப்பட்ட இடங்களில் நிவாரணவேலைகள் நடைபெறுகின்றன.

சீனாவுக்கு விஜயஞ்செய்துவிட்டு நாடு திரும்பியுள்ள அதிபர் யாஹ்யாகான் சூறாவளியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்குப்

### பிரிட்டனில் புதிய அணுசக்தி நிலையம்

லண்டன், நவ. 15

கிழக்கு இங்கிலாந்திலுள்ள சபோக் நகரில் பிரிட்டனின் மிகப்பிரமாண்டமான அணுசக்தி நிலையம் ஒன்று நிர்மாணிக்கப்படவிருக்கிறது. 'ஏ. ஜி. ஆர்' எனப்படும் இந்த அணுசக்தித் திட்டத்தில் 25 கோடி பவுண்கள் செலவாகுமென மதிப்பிடப்பட்டிருக்கிறது

இந்த உத்தேச திட்டத்தின் கீழ் நான்கு பெரிய அணுப்பொறிகள் உருவாக்கப்படும், இவை 2500 'மிகவாட்' மின்சக்தியை உண்டுபண்ணும் ஆற்றல் படைத்தவை.

பிரிட்டன் தனது முதலாவது அணுசக்தி நிலையத்தை 1956-ம் ஆண்டு நிறுவியது. இதனையடுத்து பிரிட்டன் அணுசக்தி வாயிலாகவே பெருமளவு மின்சார சக்தியைப் பெற்றுவருகிறது.

இப்பொழுது நிர்மாணிக்கப்படவிருக்கும் அணுசக்தி நிலையம் ஐந்து ஆண்டுகளுக்கு முன்னரே பிரிட்டிஷ் மத்...

கொழும்புத்திட்டத்தின் கீழ்

### பிரிட்டனில் பயிற்சி பெற்ற இலங்கையர்

லண்டன், நவ. 15

கொழும்புத் திட்டத்தின் கீழ் தொழில் நுட்ப உதவியாக சென்ற ஆண்டு பிரிட்டன் 3,600,000 பவுண்களை வழங்கியது. இந்த உதவியின் ஒரு அம்சமாக இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், மற்றும் ஆசிய நாடுகளைச் சேர்ந்த மொத்தம் 1849 மாணவர்களுக்கு பிரிட்டனில் தொழில் நுட்ப பயிற்சி அளிக்கப்பட்டது.

கைத்தொழில், வர்த்தகத் துறைகளில் மட்டும் சென்ற வருடம் 928 பேருக்கு பிரிட்டனில் பயிற்சிபெற இடவசதி அளிக்கப்பட்டது இவர்களில் பெரும்பான்மையானோர் இந்தியா (190) இலங்கை (156), பாகிஸ்தான் (128 ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்களாவர். 1950ம் ஆண்டு கொழும்புத் திட்டம் ஸ்தாபிக்கப்பட்டதிலிருந்து இவ்விரு துறைகளிலும் மொத்தம் 9,700 வெளிநாட்டு மாணவர்களுக்கு பிரிட்டனில் பயிற்சி அளிக்கப்பட்டது.

இன்று (நவ. 16ந் திகதி) வெளியிடப் பட்டிருக்கும் கொழும்புத் திட்டத்தின் தெற்கு, தென் கிழக்காசிய தொழில்நுட்ப கூட்டுறவு சபையின் வருடாந்த அறிக்கையில் மேற்கண்ட விபரங்கள் தரப்பட்டிருக்கின்றன.

கொழும்புத் திட்டத்தின் தொழில்நுட்ப கூட்டுறவு அமைப்பின் கீழ் சென்ற வருடம் 104 பிரிட்டிஷ் நிபுணர்களும், ஆலோசகர்களும் தெற்கு தென்கிழக்காசிய நாடுகளில் பணியாற்றினார்கள் என இவ்வறிக்கை கூறுகிறது. அத்துடன் ஆராய்ச்சிக்கும் பயிற்சிக்குமென கடந்த ஆண்டு £75,000 பவுண்கள் பெறுமதியான உபகரணங்களும், இயந்திரங்களும் இந்நாடுகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. கொழும்புத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து இதுவரை மொத்தம் 1237 பிரிட்டிஷ் நிபுணர் தென் ஆசியாவில் சேவையாற்றியிருக்கிறார்கள்.

#### கல்வி உதவி

பல்வேறு சாம்ராஜ்ய கல்வி கூட்டுறவுத் திட்டங்களின்கீழ், கொழும்புத் திட்டத்தின்கீழுள்ள சாம்ராஜ்ய நாடுகளுக்கு பிரிட்டன் கல்வியுதவி அளித்துவருவதாக இவ்வறிக்கை கூறுகிறது. 1968/68வது கல்வி ஆண்டில் சாம்ராஜ்ய உபகாரநிதி திட்டத்தின்கீழ் மொத்தம் 574 வெளிநாட்டு மாணவர்கள் பிரிட்டனில் பயின்றிருக்கிறார்கள். இவர்களில் 23 பேர் இலங்கையர்களாவர். 1969/70 ஆண்டுக்கான சாம்ராஜ்ய ஆசிரிய பயிற்சித் திட்டத்தின்கீழ் 6 இலங்கையர்கள் பிரிட்டனில் பயின்றனர். அத்துடன் சென்ற வருடம் வைத்தியத் துறையில் இலங்கை, இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளைச் சேர்ந்த 60 டாக்டர்கள் பிரிட்டனில் உயர்தர ஆராய்ச்சிகளை மேற்கொண்டார்கள்.

தெற்கு, தென்கிழக்காசிய நாடுகளுக்கு கொழும்புத் திட்ட தொழில் நுட்ப, உதவியாக பிரிட்டன், அமெரிக்கா, கனடா ஜப்பான், அவுஸ்திரேலியா, நியூஸிலாந்து போன்ற உதவிநல்கும் நாடுகள் 1950ம் ஆண்டிலிருந்து இதுவரை மொத்தம் சுமார் 136 கோடி டாலர்களை வழங்கியுள்ளன.

கொழும்புத் திட்டத்தின் ஆலோசனைக் கமிட்டி மகாநாடு அடுத்தமாதம் மணிலாவில் நடைபெறவிருப்பதாகவும், 'அபிவிருத்திக்கான கல்விக்கு சர்வதேச உதவி' எனும் விடயம்பற்றி இம்நாட்டில் விவாதிக்கப்படவிருப்பதாகவும் இவ்வறிக்கை கூறுகிறது.

### அமைதி ஒப்பந்தத்தை ஜோர்டான் மீறுகிறதாம்

### கொமாண்டோக்கள் குற்றச்சாட்டு

## தென் ஆபிரிக்க பிரதிநிதிகளுக்கு ஐ. நா. மறுப்பு

நியூயோர்க் நவ. 15

தென் ஆபிரிக்காவின் பிரதிநிதிகள் சமர்ப்பித்த நியமன உறுதிப் பத்திரங்களை ஐக்கிய நாடுகள் பொதுச் சபை ஏற்கமறுத்துவிட்டது.

தென் ஆபிரிக்காவிற்குரிய உரிமைகளையும் சலுகைகளையும் இச்செயல் தடைசெய்யாது என்ற சபைத்தலைவரான நோர்வேயைச் சேர்ந்த டாக்டர் எட்வர்ட் ஹம்ரோவின் கருத்தைப் பற்றி பொதுச் சபை எவ்விதமுடிவும்செய்யவில்லை.

தென் ஆபிரிக்காவின் கொள்கைக்கு இது பெரும் கண்டனமாகவும் எச்சரிக்கையாகவும் நியமனப்பத்திரங்களை ஏற்காதது இருக்கும் என்று ஹம்ரோ குறிப்பிட்டார்.

உறுதிமொழிப் பத்திரங்களை ஏற்றுக் கொள்ளக் கூடாதென்ற தீர்மானத்திற்கு ஆதரவாக 60 வாக்குகளும் எதிராக 42 வாக்குகளும் பெற்று நிறைவேறியது. பிரிட்டன் அமெரிக்கா, பிரான்ஸ் இத்தீர்மானத்திற்கு எதிராக வாக்களித்தன 12 நாடுகள் வாக்களிப்பில் கலந்துகொள்ளவில்லை 13 நாடுகள் சமுகமளிக்கவில்லை.

ஆபிரிக்க நாடுகள் கூட்டாக இத்தீர்மானத்தைக் கொண்டுவந்தன சட்டத்துக்கு இவை விரோதமானவை என்று வாக்களிப்பு முடிந்தபின்பு இத்தீர்மானத்தைப் பற்றி தென் ஆபிரிக்கத் தூதுவர் கால் வொன் ஹீரஸ்பேர்க் அபிப்பிராயம் கூறுகையில் தெரிவித்தார்.

## முதல் யு. எஸ். விண்வெளிவீரர் அப்பலோ 14 க்கு தலைமை வகிப்பார்

கென்னடிமுனை, ஃபுளோரிடா, நவ. 15

அமெரிக்காவின் முதல் விண்வெளிவீரரான ஆலன் பி. ஷெப்பர்ட் அப்பலோ-14 பயணத்துக்குத் தலைமை வகிப்பார்.

ஏறத்தாள பத்தாண்டுக்கு முன்னர் 1961 மே 5-ம் தேதி ஆலன் ஷெப்பர்ட் அமெரிக்காவின் முதல் விண்வெளி வீரரானார். சின்னஞ்சிறு ரெட்ஸ்டோன் ஏவுகணை ஒன்று அவரை விண்வெளியில் செலுத்தியது அவர் அப்பொழுது 15 நிமிடம் விண்வெளியில் பூமியை குறைவட்டமாகச் சுற்றிவந்தார்.

அடுத்த ஆண்டு ஜனவரி 31-ம் திகதி நடக்கவிருக்கும் அப்பலோ-14 அம்புலிப்பயணத்துக்குத் தலைமைவிமானி ஷெப்பேர்ட்.

ஊர்திகள், விண்வெளிக் கப்பல்கள் இணைக்கப்படும் கட்டடங்களுக்கும், அட்லாண்டிக் கரையோரமாக இருக்கும் ஏவுதளத்துக்கும் இடையேயுள்ள தூரம் 3 மைல். உலகிலேயே வலிமைமிக்க ஆற்றல்மிக்க மாபெரும் ஏவுகணையான ஸாட்டர்ன் இந்தக்கட்டடங்களிலிருந்து நவம்பர் 9-ம் திகதி ஏவுதளத்திற்குக் கொண்டு போகப்பட்டது.

ஜோன் ஸ்வைகர்ட் ஆகியோரை அம்புலிக்குச்செல்லவொட்டாமல் பூமிக்குத் திரும்பிவிடச் செய்தது அவர்கள் நிலாஊர்தியையே 'உயிர்காக்கும்படகு' போல் பயன்படுத்தி பூமிக்குத் திரும்பிவந்தனர்

அப்பலோ-13 விபத்தின் படிப்பினையாக இப்பொழுது தாய்க்கப்பலும் பணிப்பகுதியும் இன்னும் அதிக பத்திர முன்னவையாகச் செய்யப்பட்டுள்ளன. தீப்பற்றுத பொருள்களைப் பயன்படுத்தி தீ விபத்துக்கு இடையூறு இல்லாமல்செய்யப்பட்டிருக்கிறது. கம்பிகளும்புதுமுறையில் அமைக்கப்பட்டுள்ளன. அதிகப்படியாக ஒரு ஒக்ஸிஜன் தொட்டியும் பணிப் பகுதியில் இருக்கும் இரண்டு தொட்டிகளுடன் சேர்க்கப்பட்டுள்ளது தாய்க்கப்பலில் அதிக ரசாயனமின்கலங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஏதாவது கோளாறு ஏற்படுமாகில். இவற்றால் மூச்சுவிடுவதற்கு அதிகக்காற்றும் மின் விசையும் கிடைக்கும்.


இப்பொழுது அம்புலிக்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட வயதைவிடமிகத்தொன்மையான அம்புலிக்கற்களை அப்பலோ-14 வீரர்கள் இறங்கப்போகும் ஃபிராமாரோப் பகுதியிருந்து கொண்டு வருவார்கள் என்று விஞ்ஞானிகள் நம்புகின்றனர்.

### 'வருங்கால சந்ததியினரைப் பற்றி சிந்திக்க வேண்டும்'

தாவடி, ஞாயிறு

"குறையில்லாதவன் மனிதனாகமாட்டான். குறைகள் இருப்பதனாலேதான் நாம் சுறுசுறுப்புள்ளவர்களாகவும், விவேகிகளாகவும், முன்னேறவேண்டும் என்னும் பேரவாக்கொண்டவர்களாகவும், வாழமுடிகிறது. குறைகள் இருப்பதையிட்டு நாம் வீணைகவலைகொள்...

ஓய்வுபெற்ற ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீவில் கணிசமானவர்கள் இறந்திருக்கலாமென நம்பப்படுகிறது

கடந்த வியாழக்கிழமை குல்நா மாகாணத்தில் இந்து ஆலயத்தில் நடக்கவிருந்த திருவிழா நடைபெறவில்லை இந்த ஆலயத்திற்குச் சென்றிருந்த யாத்திரீகர்கள் ஆயிரக்கணக்கானோர் மாண்டிருக்கலாமெனக் கூறப்படுகிறது.

பாதிக்கப்பட்ட பிரதேசங்கள் முழுவதும் வெள்ளக்காடாகக் காட்சியளிப்பதாகப் பத்திரிகை நிருபர்கள் தெரிவித்தனர். பயிர்கள் முழுவதும் அழிந்துவிட்டன. பல்லாயிரக்கணக்கான மக்கள் வீடிழந்து தவிக்கின்றனர் மரங்களிலும், மரக்கிளைகளிலும் சடலங்கள் சிக்குண்டு தொங்குகின்றன. ஆயிரக்கணக்கான ஆடுமாடு

இடங்களில் நிவாரணவேலைகள் நடைபெறுகின்றன.

சீனாவுக்கு விஜயஞ்செய்துவிட்டு நாடு திரும்பியுள்ள அதிபர் யாஹ்யாகான் சூறாவளியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்குப் போய் நேரில் பார்க்கவிருக்கிறார். கஷ்டங்களுக்குள்ளான மக்களுக்கு அவசியமான சகல உதவிகளும் கிடைப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்படவேண்டுமென அதிபர் உத்தரவிட்டிருக்கிறார்.

கடற்படைக் கப்பல்களும் வேறு கப்பல்களும் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன. 2 ஆயிரம் தீவுகளில் பல முற்றாகவே அடித்துச் செல்லப்பட்டுவிட்டதாகவும், நீரில் மூழ்கியுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

அணுசக்தி வாயிலாகவே பெருமளவு மின்சார சக்தியைப் பெற்றுவருகிறது.

இப்பொழுது நிர்மாணிக்கப்படவிருக்கும் அணுசக்தி நிலையம் ஐந்து ஆண்டுகளுக்கு முன்னரே பிரிட்டிஷ் மத்திய மின்சார சபையினால் உத்தேசிக்கப்பட்ட திட்டம் என்பது குறிப்பிடத்தக்கது

......

# தொலைபேசியில் விடையளிக்கும் கம்பியூட்டர் இயந்திரம்

லண்டன், நவ 15

இப்பொழுது பிரிட்டனில் முற்றிலும் புரட்சிகரமான ஒரு தொலைபேசி சேவை ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது; இதன்பிரகாரம் ஒரு பொறியியல் நிபுணர் தமது மேசையிலுள்ள தொலைபேசியை எடுத்து பல மைல்களுக் கப்பால் உள்ள ஒரு கம்பியூட்டர் இயந்திரத்துடன் தொடர்புகொண்டு தனது பிரச்னைகளுக்கு உடனுக்குடன் விடையைப் பெற்றுக்கொள்ளலாம்.

மேற்கு இங்கிலாந்திலுள்ள 'ரெடெக் சொப்வெயர்' எனப்படும் பொறியியல் நிறுவனம் இந்த விநோதமான திட்டத்தை சமீபத்தில் அமுலுக்குக் கொண்டுவந்தது. சாதாரண தொலைபேசிச் சேவையுடன் இது இணைக்கப்பட்டிருப்பதால் சகலரும் இதனால் பயன்பெறலாம்;

முதலில் 1904 ஏ என்ற எண்ணுக்கு 'டயல்' செய்துவிட்டு 'டெலிபிரிண்டர்' போன்ற நவீன தட்டெழுத்துக் கருவி ஒன்றில் கேள்விகளை அடிக்கவேண்டும். அவ்வளவுதான், உடனுக்குடன் அதே தட்டெழுத்துக் கருவியில் கம்பியூட்டர் இயந்திரத்திலிருந்து பதில் அடித்துத் தரப்படும்.

இந்த நுட்பமான முறையில் தொழில் நுணுக்க இரகசியங்களை அறிவதற்கு அமெரிக்கப் பொறியியல் நிறுவனங்கள் பல ஆவல் தெரிவித்துள்ளன.

## வெற்று நிலத்தை அபிவிருத்தி செய்ய தீர்மானம்

கோட்டை, ஞாயிறு

பதுளை மாவட்டத்திலுள்ள தேயிலைத்தோட்டங்களுக்கு இடையேயுள்ள திருத்தப்படாத காணிகளை எடுத்து திருத்தி நிலமற்ற விவசாயிகளுக்கு வழங்குவதென அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

பதுளை மாவட்டத்தில் தேயிலைத் தோட்டங்களின் எல்லைகளுக்கிடையே வெற்றுக்காணிகள் பெருமளவில் உள்ளன. இவற்றையே அரசாங்கம் எடுத்து திருத்தி நிலமற்ற விவசாயிகளுக்கு உபஉணவுப்பயிர் செய்கைக்கு வழங்குவதெனத் தீர்மானித்துள்ளது.

......

## திருட்டு

வேலணை, ஞாயிறு

வேலணை கிழக்கில் நாளுக்குநாள் திருட்டு அதிகரித்து வருகிறது அண்மையில் ஒரு வீட்டில் புகுந்த கள்வர் கோஷ்டி குழந்தையின் கையில் கிடந்த தங்கக் காப்புகளைக் களவாடிச் சென்றுள்ளதாம். மறுநாள் அடுத்தவீட்டில் பிடவைகளும், வேறொருவீட்டில் எரிந்து கொண்டிருந்த ஒரு லாம்பும் களவாடப்பட்டுள்ளதாம்.

## முல்லைத்தீவில் ஐ. நா. விழா

முல்லியவளை, ஞாயிறு

முல்லைத்தீவு மகாவித்தியாலய மண்டபத்தில் பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் சொ. கணேசநாதன் தலைமையில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் தினவிழாப் பேச்சுப்போட்டியில் முள்ளியவளை வித்தியானந்தக் கல்லூரி மாணவன் இ. தங்கத்துரை முதற் பரிசைச் சுவீகரித்துக் கொண்டார்.

குமுழமுனை அ. த. பாடசாலை மாணவன் க சிலோன்மணி இரண்டாம் இடத்தையும் முல்லைத்தீவு மகாவித்தியாலய மாணவன் எஸ். சூசைதாசன் மூன்றும் இடத்தையும் பெற்றனர். கீழ்ப்பிரிவுப் பேச்சுப் போட்டியில் முள்ளியவளை சைவப்பாடசாலை மாணவன் ச கருணாகரன் முதலாம் இடத்தையும், முல்லைத்தீவு சைவப்பாடசாலை மாணவன் சு. ஸ்ரீதரன் இரண்டாம் இடத்தையும் பெற்றனர்.

சீனா ஐ நா. வுக்கு வெளியே இருக்கும்வரை உலக சமாதானத்தை நிலைநாட்டுவது கஷ்டம் என்று தலைவர் பேசுகையில் குறிப்பிட்டார்.

வித்தியானந்தக் கல்லூரி, முல்லைத்தீவு மகாவித்தியாலயம் உட்படப் பல பாடசாலைகளின் நடன, நாடக நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. செல்வி நா. பாலராணி ஆசிரியையும் சொற்பொழிவாற்றினார்.

முல்லைத்தீவு வட்டார ஆசிரியர் சங்கச்செயலாளர் திரு. இ வரதராசா நன்றியுரை கூறினார்.

......

## ஆலயததுக்கு அத்திபாரக்கல்

யாழ்ப்பாணம், திங்கள்

பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையில் கடமையாற்றும்சைவஊழியர்களின் வழிபாட்டுக்கென இங்கு சித்திவிநாயகர் ஆலயம் ஒன்று அமைக்கப்படவிருக்கிறது. இதற்கான அத்திபாரக்கல் நேற்றுமுன்தினம் நாட்டப்பட்டது.

# அமைதி ஒப்பந்தத்தை ஜோர்டான் மீறுகிறதாம் கொமாண்டோக்கள் குற்றச்சாட்டு

அம்மான், நவ. 15

உள்நாட்டுக் கலகத்தின் பின்னர் ஏற்பட்ட அமைதி உடன்படிக்கையை ஜோர்டான் அரசாங்கம் மீறிவருவதாக கொரில்லாக்கள் குற்றஞ்சாட்டியிருக்கிறார்கள்.

அமைதியேற்பட்ட பின்னரும்கூட ஏராளமான கொரில்லாக்களை விடுதலை செய்யாமல் இன்னமும்சிறையில் அரசாங்கம் வைத்திருப்பதாக கொமாண்டோக்கள் குற்றஞ்சாட்டியிருக்கிறார்கள். இக்குற்றச்சாட்டுக்களை ஜோர்டான் அரசு மறுத்துள்ளது

சிறையில் வைக்கப்பட்டுள்ளவர்கள் அமைதியை மீறியவர்களாயும், வெளிநாட்டவர்களாயும்தான் இருக்கிறார்கள் என்று அரசு அறிவித்துள்ளது.

## 'உண்டு உடுப்பதுதான் வாழ்வல்ல' கவிஞர் கருத்து

யாழ்ப்பாணம், ஞாயிறு

கலை வளர உள்ளம் வளரும், உள்ளம் வளர ஒற்றுமை வளரும், ஒற்றுமை வளர ஊர்வளரும் உண்டு உடுத்து வாழ்வது மட்டும் வாழ்க்கையின் நோக்கமன்று இதற்கு அப்பாலும் மனிதன் செய்யவேண்டியவை பல உள்ளன. ஊருக்கு உழைத்தல், கலைகளை வளர்த்தல் என்பவற்றிலும் மக்கள் ஈடுபடல்வேண்டும். அவ்விதம் உழைப்பவர்களுக்கு ஆதரவு அளித்தல்வேண்டும்.

இவ்வாறு கவிஞர் வி. கந்தவனம் நுணாவில் இளந்திரையன் மன்றத்தின் முதலாவது ஆண்டுவிழாவில் கலந்துகொண்டு பேசுகையில் குறிப்பிட்டார், வீரபத்திரர்ஆலய வீதியில் இவ்விழா நடைபெற்றது. இளந்திரையன் மன்றத் தலைவர் இரா. ஸ்ரீ ராமச்சந்திரன் விழாவுக்குத் தலைமைவகித்தார்

குறுகிய மனப்பான்மைகொண்டு கலைஞர்களை எடைபோடுதல்கூடாது. யார் தடுத்தாலும் உண்மைக் கலைஞனின் ஆற்றல் உருவெடுத்தே தீரும் என்று ஆசிரியர் செல்லையா பேசுகையில் கூறினார்

ஆதவன் குழுவினரின் மெல்லிசை, 'புரோக்கர் அமாவாசையார்' அடிசக்கை அப்பலோ வீரர்' முதலிய கலைநிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

## படுகாயம் விளைவித்ததான வழக்கில் தீர்ப்பு

வல்வெட்டித்துறை, ஞாயிறு

புலோலி தெற்கைச் சேர்ந்த துரைராசா, நடராசா, பரஞ்சோதி, பாலகிருஷ்ணன் சிவஞான தவி ஆகியோர் கடந்த தைமாதம் 1ந் திகதி அதே இடத்தைச் சேர்ந்த வே. பாலசுப்பிரமணியம் என்பவருக்கு மினாசாய்த்தூள் வீசியும், அடித்தும் படுகாயம் உண்டுபண்ணியதாக பருத்தித்துறைப் பொலிசாரால் குற்றம்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு கே விக்னராசா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

விசாரணையின் பின்னர் மாஜிஸ்திரேட் 1-ம், 5-ம் எதிரிகளை விடுதலை செய்து 2-ம், 4-ம் எதிரிகளை தலா 100 ரூபா கோட்டுச் செலவாகவும் 6 மாத நன்னடத்தைப் பிணையும் 3-ம் எதிரிக்கு ரூபா 100 அபராதமும் விதித்துள்ளார்.

## அமைச்சர் குழு

யாழ்ப்பாணம், திங்கள்

கொழும்புத்துறை ஆசிரிய கலாசாலையின் 1971-ம் ஆண்டிற்கான அமைச்சர் குழுத்தெரிவு, கலாசாலை மண்டபத்தில், அதிபர் திரு. வி. எஸ். விஸ்வலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

திரு. ச. கனகலிங்கம் பிரதம அமைச்சராகவும் திரு. நா. திருச்செல்வம் கல்வியமைச்சராகவும், திரு. ச. அ. மிராண்டா விளையாட்டு அமைச்சராகவும், திரு. இ. பாலசுப்பிரமணியம் நிதியமைச்சராகவும் திரு. வை. சின்னத்தம்பி பாதுகாப்பு அமைச்சராகவும், திரு. வி. சிவஞானபோதன் தபாலமைச்சராகவும், திரு. கா. கந்தையா விவசாய அமைச்சராகவும், திரு. கு. யோமே பெர்னாண்டோ தொழிலமைச்சராகவும், திரு. ஞா. ப. அன்ரனி சுகாதர அமைச்சராகவும் தெரிவுசெய்யப்பட்டனர்.

இடையேயுள்ள தூரம் 3மைல். உலகிலேயே வலிமைமிக்க ஆற்றல்மிக்க மாபெரும் ஏவுகணையான ஸாட்டர்ன் இந்தக்கட்டங்களிலிருந்து நவம்பர் 9-ம் திகதி ஏவுதளத்திற்குக் கொண்டு போகப்பட்டது.

ஷெப்பர்ட் முதல் விண்வெளி பயணத்துக்குப் பின்னர் முற்றும் துறந்த விண்வெளி விமானியாக இருக்கவில்லை விண்வெளி வீரர்கள் குழுவிலேயே தங்கியிருந்தார். இளம் விண்வெளி விமானிகளுக்கும் புதியவிண்வெளி வீரர்களுக்கும்பயிற்சி அளிக்க உதவிசெய்து வந்தார். இவ்வாறு பயிற்சி பெற்றவர்களில் சில மாவீரர்களாகிவிட்டனர்

மெர்க்குரித் திட்டம்தான் முதல் யு. எஸ். விண்வெளித் திட்டம்; மெர்க்குரி எழுவர்தான் புகழ்பெற்ற முதல் விண்வெளி வீரர்குழு ஆலன் ஷெர்பர்ட் இவர்களில் ஒருவர் இவருடைய சகாக்கள் எல்லோரும் ஒருவர்பின் ஒருவராக திட்டத்தைவிட்டுப்போய்விட்டனர்.

முதல் எழுவரில் இப்பொழுது எஞ்சி இருப்பவர்கள் ஷெப்பர்ட்டும், 'டெக்கோ' ஸ்லேட்டன் என்பவரும்தான். ஸ்லேட்டன், விண்வெளி விமானிகள் பணித்துறை நெறியாளராக இருக்கிறார். இது நிர்வாகத்துறைதான் எனவே இவர் விண்வெளியில் பறக்கும் அந்தஸ்தில் இல்லை.

அப்பலோ-14 கலத்தில் விமானப்படை மேஜர் ஸ்டூவேர்ட் ஏ. ராஸ் தாய்க்கப்பல் விமானியாகவும், கடற்படைக் கமாண்டர் எட்கர் டி மிச்செல் நிலா ஊர்தி விமானியாகவும் ஷெர்ப்பட்டுடன் செல்வர்

## அம்புலித்தரையில்

காப்டன் ஷெப்பர்ட், கமாண்டர் மிச்செல்உடன் அம்புலியில் இறங்குவார். நிலாஊர்திக்கு வெளியே இரண்டு உலா நடக்கும் ஒவ்வொன்றும் ஐந்து மணி நேரம் பிடிக்கும். அம்புலித்தரை ஆய்வுக்கூடம் ஒன்றை அவர்கள் அமைப்பர். அம்புலியில் இறங்கிய இடத்தை ஆராய்வர். மாதிரிகளைச் சேகரித்துக்கொள்வர்.

அவர்கள் இறங்கப்போகும் இடம் மிகவும்கரடுமுரடான இடமாகும். விண்வெளி விமானிகள் யாரும் இதற்கு முன்னர் சென்றதில்லை. இங்குதான் அப்பலோ-13 விமானிகள் சென்ற ஏப்ரல் மாதம் இறங்குவதாக இருந்தது.

தாய்க்கப்பலில் ஏற்பட்ட ஒரு வெடிப்பு, அப்பலோ-13 விமானிகளான ஜேம்ஸ் லொவல், ஃபிரெட் ஹெய்ஸ்,

சுறுசுறுப்புள்ளவர்களாகவும், விவேகிகளாகவும், முன்னேறவேண்டும் என்னும் பேரவாக்கொண்டவர்களாகவும், வாழமுடிகிறது. குறைகள் இருப்பதையிட்டு நாம் வீணேகவலைகொள்ளாது குறைகளை நிவர்த்தி செய்வதில் கண்ணும்கருத்துமாக இருத்தல் வேண்டும். நாம் மட்டும், எதையும் அனுபவித்தால் போதும என்றெண்ணாது. நம் வருங்காலச் சந்ததியினரும் அனுபவிப்பதற்காக சில வழிவகைகளைச் செய்து வைக்க வேண்டும்.''

மேற்கண்டவாறு வடமாநிலப் பிரதம கல்வி அதிகாரி திருமதி ஆர். எஸ். பாமர் கூறினார். காங்கேசன்துறை ஆங்கில மகாவித்தியாலயப் பெற்றோர்தின விழாவில் கலந்து உரை நிகழ்த்தியதோடு, புதிதாக அமைக்கப்பட்ட திறந்த வெளி அரங்கையும் சமயாசாரப்படி குத்துவிளக்கேற்றித் திறந்துவைத்தார் திருமதி பாமர்.

வட்டாரக் கல்வியதிகாரி திரு. சோமசுந்தரம் பேசுகையில் ''விஞ்ஞான கூடம் அறிவுவளர்ச்சிக்கு எவ்வளவு அவசியமோ அதே போன்று உளவளர்ச்சிக்கு நாடகம் அவசியமாகும்' சுத்தமற்ற தமிழில் நாடக வசனங்களைப் பேசி நடிப்பதை விடுத்து விளங்கக்கூடிய செம்மையான தமிழிலே நாடகவசனங்களையெழுதி அப்படிப்பேசி நடிப்பது நல்லது. இதனால், மனிதனுடைய அறிவுவளர்வதுடன் உளவளர்ச்சிக்கும் பெரிதும் உதவுவதாகும் அத்துடன் இலக்கியமும் வளரும் செம்மையான நடையிலே உள்ள 'பேனட்ஷோவின் ஆங்கில நாடகங்கள் இதற்குச் சான்றாகவுள்ளன.

மாணவர்கள் காடைத்தனம் செய்வதற்கும் பலாத்காரச் செயலில் ஈடுபடுவதற்கும் நான் என்கின்ற ஆணவம்தான் காரணம் என்றார்.

ஒருகாலத்தில் மூடப்படவிருந்த வித்தியாலயம் இன்று பல துறைகளிலும் முன்னேறிக்கொண்டு போவதைக்கண்டு பெருமிதம் அடைவதாக ஆசியுரை கூறினார் மேற்படி வித்தியாலயத்தின் இளைப்பாறிய அதிபர் திரு. ஆர். சுப்பிரமணியம்.

வித்தியாலய அதிபர் திருமதி பி. சச்சிதானந்தம் வரவேற்புரை வழங்கினார் ஆசிரியர் திருச்செல்வம் நன்றியுரை கூறினார் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.



உரும்பராய், ஞாயிறு

உரும்பராய் சைவத்தமிழ் வித்தியாசாலை ஆசிரியர் திரு சி. அப்புத்துரை இம்மாதம் 12-ம் திகதிமுதல்ஓய்வுபெற்றுள்ளார். ஆசிரியர்சேவைக் காலத்தில் கடமையே கண்ணாக உழைத்தவர் இப்பெரியார், கல்விப்பணியை புனிதமாகவும் கண்ணியமாகவும் பேணி வளர்த்துத் தனக்கென ஒரு மாணவர் சமுதாயத்தை ஆக்கிக்கொண்ட பெருமை அவரைச் சாரும்.

இன்று ஆசிரியர்களாகக் கடமையாற்றும் பலர் 'எங்கள் அப்பு' என்று ஆசையோடும் உரிமையோடும் அழைக்கும் அப்புத்துரை ஆசிரியர் சேவையினின்றும் இளைப்பாறிய போதும்கல்வியுலகை விட்டுப் பிரியாது இருக்க வேண்டுமென்றும் உரும்பராய் சைவத்தமிழ் வித்தியாசாலை மாணவர்கள் விரும்புகின்றனர்.

......

## களவு ஒருவர் கைது

நீர்வேலி, ஞாயிறு

நீர்வேலி வடக்கைச் சேர்ந்த கனகசுந்தரம் என்பவரது வீட்டில் ஆயிரக்கணக்கான ரூபாய் பெறுமதியான நகைகள் களவாடப்பட்டுள்ளன அதே நாளில் அருகேயுள்ள குமாரசாமி என்பவரது வீட்டிலும் ரூபா 250 ரொக்கமாகக் களவாடப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாகச் சந்தேகத்தின்பேரில் ஒருவர் கோப்பாய்ப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

......

## மேலும் இருவர் தெரிவு

பருத்தித்துறை, ஞாயிறு

நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்திலிருந்து இவ்வாரம் மேலும் இரு மாணவிகள் இலங்கைப் பல்கலைக்கழகக் கலைப்பகுதிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

பிரார்த்தனை காலையின் திறவுகோல்; மாலையின் தாழ்ப்பாள். பிரார்த்தனையின் போது இதயமில்லாத சொற்கள் படைத்திருப்பதைவிட, சொற்களில்லாத இதயம் படைத்திருப்பது மேல்.

— மகாத்மாகாந்தி.

ஈழநாடு

Eelanadu Ltd. Jaffna Daily
Telegrams "EELANADU" Jaffna
Post Box 49, Jaffna: Telephone 889

யாழ்ப்பாணம் சாதாரண ... கார்த்திகை 1-ம் திகதி (16-11-70)

## கிராமங்களின் முக்கியம்

கிராமங்களின் முன்னேற்றத்திலும் அபிவிருத்தியிலும்தான் ஒரு நாட்டின் முன்னேற்றமும் பெருமையும் தங்கியிருக்கிறது. இதை இப்போதுதான் நமது நாட்டின் ஆட்சியாளரும் மற்றும் பலரும் உணரத் தொடங்கியிருக்கின்றனர். இந்த உணர்வு வளர்ந்து சரியானமுறையில் கிராமத்தின் வளர்ச்சிக்காக உழைத்தால் நாட்டின் முக்கிய பிரச்னைகளான வேலையில்லாத் திண்டாட்டம் வாழ்க்கைச் செலவு உயர்வு, சமூக ஒற்றுமை ஆகியவைகளுக்குச் சுலபமாகத் தீர்வு கிடைத்துவிடுமென்று எதிர்பார்க்கலாம்.

கிராமப்புறங்கள் புறக்கணிக்கப்பட்டதால்தான் நாடு முன்னேறமுடியாமல் போய்விட்டதென்றும் நகரப்புறப் பாடசாலைகளிலுள்ள வசதிகள் கிராமப்புறப் பாடசாலைகளுக்கும் இனிக் கிடைக்க வழிசெய்யப்படுமென்றும் இதுவே அரசாங்கத்தின் நோக்கமென்றும் கல்வி அமைச்சரும் உதவிக் கல்வி அமைச்சரும் கூறிவருகின்றனர். ஒரேஇடத்தில் அதிகாரம் குவிந்திருக்காமல் அதைப் பகிர்ந்தளிக்க வேண்டிய அவசியத்தை காலஞ்சென்ற பிரதமர் திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயகா நன்குணர்ந்திருந்ததால்தான் கிராமசபைகள் பட்டினசபைகள் போன்ற உள்ளூராட்சி மன்றங்களுக்கு அதிக அதிகாரங்கள் கொடுக்கவேண்டுமென வலியுறுத்திவந்தார். முன்னர் இருந்ததைவிட அதிகஅதிகாரங்கள் பெற்றுக்கொடுத்ததன் மூலம் உள்ளூராட்சி மன்றங்களின் பிதா என்ற பெயரையும் பெற்றார். கிராமங்கள், பட்டினங்கள் அபிவிருத்தியடைந்தால்தான் முன்னேற முடியுமென்பதை அவர் அறிந்திருந்து வலியுறுத்தியிருந்தார். "இந்தியா தனது கிராமங்களிலே தங்கியே வாழ்கிறது. கிராமங்கள் அழிந்தால் இந்தியாவே அழிந்துவிடும்" என்று காந்தியடிகள் கூறியதையும் ஐரிஷ் மக்கள் அல்ஜீரியமக்கள் கிராமமுன்னேற்றத்தைக் கொண்டு எப்படி விடுதலைபெற்றார்கள் என்பதையும் திரு பொன்னையா எடுத்துக்காட்டியிருந்தார்.

சில அரசாங்க நியமனங்களை அந்தந்த பிரதேச ரீதியில் நடத்துவதற்கு அரசு திட்டமிட்டிருப்பதாக உள்ளூராட்சி, உள்நாட்டு அமைச்சர் திரு. பீலிக்ஸ் ஆர். டயஸ் பண்டாரநாயகா சமீபத்தில் தெரிவித்திருந்தார்.

இவை யாவும் எதற்கும் தலைநகரத்தையே நாடிநம்பியிருக்கும் மனப்பான்மையும் அதிகாரங்களை ஒரே இடத்தில் குவித்துவைத்திருக்கவேண்டுமென்ற மனப்பான்மையும் மாறிவருவதற்கான நல்ல அறிகுறிகளைத் தோற்றுவித்திருப்பதையே காட்டுகிறது.

உலகிற்கு அஹிம்சையை உணர்த்திய காந்திமகானும் ஆயுதப்புரட்சிதான் எதற்கும் பரிகாரம் என்று கூறும் நவசீனத் தலைவர் மா-சே-துங்கும் கிராமங்களில்தான் ஒரு தேசத்தின் வாழ்வு தங்கியிருக்கிறதென்பதை உணர்த்தியிருக்கின்றனர்

ஆட்பலம் குறைந்த மேல்நாடுகளில் இயந்திரசாதன வளர்ச்சியால் உற்பத்திப் பெருக்கமும் ஏற்பட்டுள்ளது. இது அவர்களுக்கு வெற்றியளித்திருக்கலாம். ஆனால் அவர்களைப் பின்பற்றுவதுதான் நாகரிகம், நவீனம் என்ற மனப்பான்மையில் இயந்திர சாதனங்களைக் கொண்டு தொழில் வளர்ச்சிக்கு முனைந்த ஏழைத்தேச நாடுகளில் வேலையில்லாப்

# மேல்சபை எப்படி அமையவேண்டும்

[இலங்கை தேசிய தமிழ்க்கருமக்கழகம் அரசியல்நிர்ணய சபைக்கு அனுப்பிவைத்துள்ள மகஜரின் கடைசிப்பகுதிஇது. முதற்பகுதி நேற்றுவெளிவந்தது]

காலஞ்சென்ற பிரதமர் கௌரவ எஸ் டபிள்யூ ஆர் டி பண்டாரநாயகா 1958-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 5-ம் திகதி பார்லிமெண்டில்பின்வருமாறு கூறினார்:

"உலகில் இதற்கு முன்பிருந்த சர்வதேச சட்டத்தின் கீழ் அடிப்படைஉரிமைகளைப்பற்றி நிலவிய அபிப்பிராயத்தின்படிக்கோ அல்லது ஐக்கிய நாடுகள் சபை பிரகடனம்செய்த மனித உரிமைகள் சட்டத்தின் படிக்கோ மொழிப்பாதுகாப்பு அடிப்படை உரிமைகளின் ஒரு மிகப் பிரதானமான அம்சமாகும். உதாரணமாக ஒரு தமிழ்க் குழந்தைக்கு தமிழ்மூலம் கல்வி பயிலும் உரிமை கீழ் வகுப்பில் அளிக்கப்பட்டால் அவன் பல்கலைக்கழகம் பிரவேசிக்கும்போது சிங்களத்தில் படி என்று கூறமுடியுமா? பல்கலைக்கழகத்திலும் அவனுக்கு தமிழ்மூலம்தான் கல்வி பயிற்றப்படவேண்டும்."

10. நீதிபரிபாலனசேவையின் சுதந்திரம் உத்தரவாதம் செய்யப்படவேண்டும்.

11. அடிப்படை உரிமைகளை தொழிலாற்றுவதற்கு சுப்பிரீம்கோட்டிலோ பார்லிமெண்டினால் அதிகாரம் பெற்ற வேறெந்த நீதிமன்றத்திலோ வழக்குப்போடும் உரிமை உத்தரவாதம்செய்யப்படல்வேண்டும்.

வேறு சில விஷயங்களையும் நாம் முக்கியமானவை என்று கருதுகிறோம்.

(அ) பொருத்தமான பெயர்களுடன் சட்டசபையில் இரண்டு அங்கங்கள் இருக்க வேண்டும்.

கீழ் சபைக்கு ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை தேர்தல் நடக்கும். சட்டங்களினால் தகுதியற்றவர்கள் என்று கருதப்படாத 18வயதுக்கு மேற்பட்ட பிரஜைகள் எல்லோருக்கும் வாக்குரிமையுண்டு. ஒவ்வொரு மாகாணத்திலுமுள்ள உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்களைக்கொண்ட ஒரு தேர்தல் சபை மேல்சபை பிரதிநிதிகளை தெரிவுசெய்யும். ஒவ்வொரு தேர்தல்சபையும் ஒவ்வொரு மாகாணத்

ஜனாதிபதி தெரிவு செய்யப்படுவார். பின்கண்டவர்கள் ஜனாதிபதி பதவிக்கு அருகதையாகமாட்டார்கள்.

(க) இலங்கை பிரஜையல்லாதவர்.

(ங) சட்டசபைக்கு தெரிவு செய்ய அருகதையற்ற 40 வயதுக்குட்பட்டவர்.

ஜனாதிபதி ஐந்துவருடங்களுக்கு பதவியிலிருக்கலாம். மேலும் ஒருமுறைக்கோ அல்லது கூடுதலாகவோ அவர் திரும்பவும் தெரிவு செய்யப்படலாம், பதவியிலிருந்து விடுபட்டபின் அவர் பொதுவாழ்வில் உத்தியோகம் வகிக்கலாகாது.

(இ) நீதி சேவை- குடியரசு ஏற்பட்டதும் பிரிவி கௌன்சிலுக்குப் பதிலாக ஒரு சுப்றீம்கோர்ட்டும், சுப்றீம் கோட்டுக்குப் பதிலாக ஓர் உயர்நீதிமன்றமும் அமைக்கப்படும். இந் நீதிமன்றங்களின் சுதந்திரத்தை பின்வரும்முறைகளில் ஸ்தாபிக்கவேண்டும்.

(க) சுப்றீம்கோர்ட்நீதிபதிகளின் சிபார்சின்பேரில் பிரதம நீதிபதி ஜனாதிபதியால் நியமிக்கப்படுதல். மற்ற நீதிபதிகளும் இம்மாதிரியே.

(ங) சுப்றீம் கோர்ட் நீதிபதிகளின் சிபார்சின்பேரில் உயர்நீதிமன்றத்தின் பிரதம நீதிபதி ஜனாதிபதியால்நியமிக்கப்படுதல். உயர்நீதிமன்றத்தின் பிரதம நீதிபதியின் ஆதரவுடன் மற்றும் உயர்நீதிமன்ற நீதிபதிகளும் இவ்வாறே.

(ச) உயர் நீதிமன்ற நீதிபதிகள் 62 வயதிலும், சுப்றீம் கோர்ட் நீதிபதிகள் 65 வயதிலும் ஓய்வு பெறுதல். பதவி நீடிப்பதற்கு அதிகாரமில்லை.

(ஞ) நீதிபதிகளின் சம்பளத்தில் மாற்றம் உண்டாக்குவதில்லை.

(ட) இப்போதுபோல இருசபைகளுக்கும் பிரசங்கம் அகற்றப்படுதல். நீதிபதிகளின் சிபார்சுகளைப் பெறுவதற்குவேண்டிய ஒழுங்குகள்பற்றி விதிகள் அமைக்கப்படலாம். கூடியவரையில் நீதிபதிகளின் முடிவுகள் வாக்குமூலமல்லாமல் சம்மதம்மூலம் அமைதல்.

### சுப்ரீம் கோர்ட் உயர் நீதிமன்றம் ஆகியவற்றின் நீதி பரிபாலனம்

இரு கோர்ட்டுகளுக்கும் ... கட்டளை பிறப்பிக்க அதிகாரமுண்டு. அல்லது

யல் சட்டப் பிரச்னைகளையும் சுப்ரீம் கோர்ட் விசாரிக்கும்.

### கனிஷ்ட நீதி சேவை

இது தற்சமயம் இருப்பது போலவே. ஆனால் நீதி சேவை கொமிஷனில் எல்லா சுப்ரீம் கோர்ட் நீதிபதிகளும் இருப்பர். முதல் நியமனங்கள் சம்பந்தமாக சுப்ரீம் கோர்ட் பிரதம நீதியரசரின் நியமனத்தில் ஜனாதிபதி தாம் விரும்பியபடி இப்போதுள்ள பிரதம நீதியரசரையும் மற்றும் சுப்ரீம் கோர்ட் நீதிபதிகளையும் கலந்தாலோசிக்கலாம்.

மேற்கண்டவாறு சுப்ரீம் கோர்ட் அமைக்கப்பட்ட பின்பு உயர் நீதிமன்ற நீதிபதி நியமிக்கப்படலாம்,

சுப்ரீம் கோர்ட் நீதிபதிகளின் தொகை ஐந்துக்கு மேற்படப்படாது.

### (ச) நீதி சேவை கொமிஷன்

நீதி சேவையிலுள்ள அங்கத்தவர்களின் நியமனம், பதவிஉயர்வு, இடமாற்றம், ஒழுங்கு நடவடிக்கை ஆகியன சுப்ரீம் கோர்ட் நீதிபதிகளின் அதிகாரத்துக்குள்ளிருக்கும் மூன்று நீதிபதிகள் உபகுழு அமைக்கலாம்.

### (உ) பொதுச் சேவை கொமிஷன்

பொதுச்சேவை நியமனங்களும் கட்டுப்பாடும் ஒரு சுதந்திரமான பொதுச் சேவை கொமிஷனிடத்தில் தங்கியிருக்கும் அதன் அங்கத்தவர்களை ஜனாதிபதி ஒரு குறிப்பிட்ட தவணைக்கு நியமிப்பார். சுப்ரீம் கோர்ட் விசாரணை நடத்திய பின்னரே இவர்களை அகற்றமுடியும். ஓர் அங்கத்தவர் அகற்றப்பட்டால் அல்லது அவர் பதவிகாலம் முடிந்துவிட்டால் அவர் மீண்டும் இந்த கொமிஷனுக்கோ வேறு அரசாங்க பதவிக்கோ நியமிக்கப்படமாட்டார்.

மேலேயுள்ளதற்கு ஒரு நிபந்தனை என்னவெனில் அரசாங்கத்தினதும் மந்திரிகளினதும் பூரண நம்பிக்கைக்கு பாத்திரமானவர்கள் வகுக்கும் பதவிகளுக்கு குறிப்பாக 'அரசியல் நியமனங்கள்' என்று பெயரிடவேண்டும். அரசாங்கம் தன் னிஷ்டப்படி இவர்களை நியமிக்கலாம். வேறொரு அரசாங்கம் பதவிக்கு வரும்போது இவர்கள் ராஜினாமா செய்யவேண்டும்.

(முற்றும்)

## ஜயாறன் எழுதுவது:

இன்னும் சில வருடங்களிலே அமெரிக்கர் இங்கு வந்து நமக்கு யோகாசனங்கள், தியானமுறை இவற்றைக் கற்பிக்கலாமென்று ஓர் அன்பர் கூறியிருந்தார். யோகாசனங்களில் நல்ல பயிற்சி பெற்று, மேலான முறையில் அவற்றை அமெரிக்க வாலிபர்களும் பெண்களும், யாழ்ப்பாண நகர மண்டபத்தில் சுவாமி சச்சிதானந்தாவின் தலைமையில் செய்துகாட்டியதைப் பார்த்த பின்பே அந்த அன்பர் அப்படிச் சொன்னது. அந்த அன்பர் கூறியவை சில வருடங்களிலல்ல இப்போதே நடப்புக்கு வந்துவிட்டதை முந்தாநாள் அளவெட்டியில் கண்டேன்!

மாஸ்டர் சுப்பிரமுனியா என்ற அமெரிக்க சாது, அளவெட்டியிலுள்ள ஆசிரமத்துக்கு தமது அமெரிக்க சீடர்களுடன் வந்திருப்பதாயும் யோகர் சுவாமிகளிடம் தீட்சை பெற்றவரென்றும் இரு நாட்கள் அங்கு நல்ல நிகழ்ச்சிகள் இருப்பதாகவும் என்னையும் வருமாறு அழைத்தனர், அமெரிக்கா சம்பந்தப்பட்ட எதுவாயினும், துரதிருஷ்டவசமாக சந்தேகக் கண்ணுடனேயே பார்க்கப்படும்காலம் இது! 'உங்கள் நாட்டிலே நீங்கள் நிம்மதியாக இருக்க முடியவில்லையே. கொடிய ஆயுதங்களை வழங்கி, ஆசியாவில் யுத்தங்களைப் பரப்பி வருகிறீர்களே!' என்று வந்திருந்த ஓர் அன்பர் அமெரிக்க வாலிபரிடம் கூறியதும், இந்த யுத்தங்களை எதிர்த்து அமெரிக்க வாலிபர்களே பலத்த கிளர்ச்சிகளையும் ஆர்ப்பாட்டங்களையும் செய்வதாகவும், அமைதியை நாடியே தாங்கள் இப்பகுதிகளுக்கு வருவதாகவும் 'டக்' கென்று பதிலளித்தார் அவர்.

இந்தியாவுக்கு விடுதலை பெற்றுத் தந்த மகாத்மா காந்தி அடிகளே சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். பிரதமர் பண்டாரநாயக்காவையும் அப்படியே செய்துவிட்டோம். பிறரைச் சொல்ல நமக்கு வாயேது! என்ற நினைப்பு வந்ததும், மேலே பேசத் தோன்றவில்லை.

0 0 0

முந்தாநாள் மாலை அளவெட்டியிலுள்ள "சுப்பிரமுனியா ஆசிரமத்துக்கு அழைத்துச் சென்றனர். அறைகருள்ளே ஒரு வாங்கு மீது சுமார் 45 வயதுள்ள ஒரு பெரியார் கம்பீரமாக வீற்றிருந்து அன்புடன் வரவேற்றார். அருளும் அமைதியும் நிறைந்த முகம். யாருடைய மனதையும் கவரக்கூடிய தோற்றம். காதில் சிவப்புக்கல் கடுக்கன் நெற்றியில் திருநீறு சந்தனப் பொட்டு. இடுப்பில் தட்டுச் சுற்று வேட்டி, மேலுக்குச் சட்டையில்லை, தூய வெண்மையான அங்கவஸ்திரத்தை யோகமுறையில் அணிந்திருந்தார், பார்த்தால் நம்மவர் போலவே இருந்தார்.

தியானக்கலைக்காக ஒரு பல்கலைக்கழகத்தையே அமைத்து நடத்துகிறாராம்! 24 வருடங்களுக்கு பயிற்சியைப் படிப்படியாக அளிப்பதாயும், பல இளம் அமெரிக்கர் ஆண்களும் பெண்களும் இதில் சேர்ந்து படிப்பதாகவும், சைவ உணவு, பிரம்மச்சரியம் முதலிய கட்டுப்பாடுகள் உண்டென்றும் தெரிவித்தார். தியானத்துக்கா

கரவெட்டியில்

# 'பொலிஸார் அட்டூழியம்' பற்றி பிரதமருக்கு எம். ஸி. தந்தி

யாழ்ப்பாணம், திங்கள் பருத்தித்துறைப் பொலிஸ் பகுதியிலுள்ள கரவெட்டிகிழக்கில்கடந்த 12-ம் திகதி நள்ளிரவில் பொலிசார் சிறுபான்மை இன மக்களுக்கு கொடுமைகள் இழைத்திருப்பதாகவும் இந்தச்சம்பவம் குறித்து உடனடியாக பகிரங்க விசாரணைநடத்தும்படியும் நெல்லியடி பொலிஸ்நிலையத்திலுள்ள சகல பொலிஸ்காரர்களையும் இடமாற்றம் செய்யும் படியும் ஆட்சிமன்ற நியமன உறுப்பினர் திரு. எம். ஸி. சுப்பிரமணியம் பிரதம மந்திரி திருமதி சிறிமா பண்டாரநாயக்காவுக்கு தந்திச் செய்தியொன்றை அனுப்பியுள்ளார்.

பொலிஸ் அட்டூழியம் ... சம்பவம் முழுவதும் நடக்கும்படி செய்திருக்கிறார்கள். அவர்களின் பானைகள், சட்டிகள் மற்றும் சாமான்களைப் பொலிசார் உடைத்து நொறுக்கியிருக்கிறார்கள் வீடுகள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன கர்ப்பிணிகள் கஷ்டங்களுக்குள்ளாக்கப்பட்டுள்ளனர். பெண்கள் பலவந்தப்படுத்தப்பட்டு அதனை அவர்கள் முறியடித்திருக்கிறார்கள் வள்ளியம்மை என்ற சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த பெண்ணின் கடை சூறையாடப்பட்டுள்ளது மூன்று சைக்கிள்களும் ஒரு றேடியோவும் காணாமல் போயிருக்கின்றன.

அப்பகுதிப் பொலிசாரின் அனுசரணையுடன் உயர் சாதிக்காரர்களால் சூழப்பட்டிருக்கிறது பொலிஸ் தாக்குதலுக்குப் பயந்து மக்கள் பொலிசில் புகார்செய்யப் பயப்படுகிறார்கள்.

இவ்வாறு திரு சுப்பிரமணியம் தமது தந்தியில் தெரிவித்திருக்கிறார்.

## உழவு யந்திரம் கவிழ்ந்து சாரதி மரணம்

யாழ்ப்பாணம், திங்கள் வயலில் ஆழ்ந்துபோன உழவு யந்திரத்தை மீட்பதில் ஈடுபட்ட சாரதி நகங்கி...

பஸ்சேவை சீர்கேடு பற்றி புகார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த அதிகாரங்கள் பெற்றுக் கொடுத்ததன் மூலம் உள்ளூராட்சி மன்றங்களின் பிதா' என்ற பெயரையும் பெற்ருர். கிராமங்கள், பட்டினங்கள் அபிவிருத்தியடைந்தால்தான் முன்னேற முடியுமென்பதை அவர் அறிந்திருந்ததால்தான் பிரதேசரீதியில் அவற்றை விருத்திசெய்யும் நோக்கத்துடன் பிரதேச சபைகளையும் அமைக்க அவர் ஒப்புக்கொண்டார்.

சில தினங்களுக்கு முன் கோண்டாவில் கிழக்கு அரசினர் இராமகிருஷ்ண வித்தியாலயத்தின் பெற்ருேர்தின பரிசளிப்புவிழாவில் பேசிய நல்லூர்த் தொகுதி ஆட்சி மன்ற உறுப்பினர் திரு. சி. அருளம்பலம் ஒவ்வொரு பெற்ருேரும் தங்கள் தங்கள் பிள்ளைகளை ஊரிலேயுள்ள படசாலைகளில் கல்வி கற்கச் செய்வதனுல் கிராமத்திலேயுள்ள பாடசாலை வளர்ச்சியடைய முடியுமென்றும் இதன்மூலம் கிராமமும் முன்னேற்றமடையுமென்றும் குறிப்பிட்டிருந்தார். நெல்லியடி மத்தியமகாவித்தியாலய விஞ்ஞானக்கழகக் கூட்டத்தில் யாழ் பெற்ருர்சங்கச் செயலாளரும் வழக்கறிஞருமான திரு. எஸ். பொன்னையா சில தினங்களுக்கு முன் உரையாற்றுகையில் கிராமங்களைத் தன்னிறைவுடையனவாக்கினுல் மட்டுமே தன்மானத்துடன் வாழ முடியுமென்பதை வலி

யுறுத்தியிருக்கிறார்கள். இதுவே அவர்களைப் பின்பற்றுவது தான் நாகரிகம், நவீனம் என்ற மனப்பான்மையில் இயந்திர சாதனங்களைக் கொண்டு தொழில் வளர்ச்சிக்கு முனைந்த ஏழைத்தேச நாடுகளில் வேலையில்லாப் பிரச்னையும் விலைவாசி உயர்வும் அதிகரித்து எதற்கும் அந்நிய நாடுகளையே எதிர் பார்த்து சுதந்திரமற்ற வாழ்வு வாழவேண்டிய நிலையே ஏற்பட்டிருக்கிறது.

கிராம மக்களுக்கு கிராம நிர்வாகத்தில் சுதந்திர மளிக்கப்பட்டால் தங்கள் கிராமம் என்ற உணர்வில் விவசாயம், குடிசைத் தொழில், கைத்தொழில் சிறு தொழில்களில் உற்சாகமாக ஈடுபட்டு கிராமம் தன்னிறைவுபெறவும் நாடு தன்னிறைவு பெற்று சுதந்திரமாகவும் சுபீட்சமாகவும் வாழ வழி பிறக்கும்.

சமீபத்தில் நேரு ஞாபகார்த்தமாக சர்வதேச இணக்கப்பரிசு பெற்ற அமெரிக்கரான வயலின் இசை மேதை யெஹுதிமெனுஹின் இயந்திரசாதன வளர்ச்சியினுல் வேலையின்மைதான் வளர்ந்திருக்கிறதேயொழிய நாகரிகமும் பண்பாடும் வளரவில்லையெனச் சுட்டிக்காட்டியிருந்தது இலங்கை உட்பட ஏழைத்தேச நாட்டு மக்களின் சிந்தனையைத்தூண்ட உதவ வேண்டும்.

# சமசமாஜக் கட்சியின் 35-வது ஆண்டு நிறைவு

கோட்டை, ஞாயிறு

லங்கா சமசமாஜக் கட்சியின் 35-வதுஆண்டு நிறைவு விழாவை கொண்டாடுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. டிசம்பர் 18-ம் திகதி லங்கா சமசமாஜக் கட்சியின் 35-வது ஆண்டு நிறைவுதினமாகும். டிசம்பர் 12-ம் திகதி இந்த விழாவைக் கொண்டாடவும் கொழும்பில் டிசம்பர் 19ம் திகதி பொதுக் கூட்டமொன்றை நடாத்தவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு எஸ். ஏ விக்கிரமசிங்கா ஆகியோர் இப் பொதுக்கூட்டத்தில் பிரதம பேச்சாளர்களாகக் கலந்துகொள்வார்கள். நாட்டின் 53 இடங்களில் சமசமாஜக் கட்சியின் வரலாறு குறித்து மக்களுக்கு விளக்கம் கொடுக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

டிசம்பர் 19-ம் திகதி கொழும்பில் சமசமாஜக் கட்சி உறுப்பினர்கள் மத்தியில் கட்சியின் கொள்கைத் திட்டங்கள் பற்றி நிதி மந்திரி டாக்டர் என் எம். பெரேரா, டாக்டர் கொல்வின் ஆர் டி சில்வா, திரு லெஸ்லி குணவர்த்தன திரு பெர்னட் சொய்சா ஆகியோர் உரை நிகழ்த்துவர்.

······

## இரத்ததானம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

சேர் பொன்னம்பலம் இராமநாதன் கனிட்ட பல்கலைக்கழக மாணவர்கள் யாழ்ப்பாணம் இரத்தவங்கிக்கு இரத்ததானம் செய்துள்ளார்கள் கடந்த வருடமும் இவர்கள் இரத்த தானம் வளங்கினுர்கள்.

(கு, வி. ம.)

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலே வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு நவம்பர் மாதம் 16-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

குரிமையுண்டு. ஒவ்வொரு மாகாணத்திலுமுள்ள உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்களைக்கொண்ட ஒரு தேர்தல் சபை மேல்சபை பிரதிநிதிகளை தெரிவுசெய்யும். ஒவ்வொரு தேர்தல்சபையும் ஒவ்வொரு மாகாணத்திலிருந்து மூன்று பிரதிநிதிகளை மேற்சபைக்கு தெரிவு செய்யும். கீழ்ச்சபையைப் போலவே மேற்சபையும் ஒரே சமயத்தில் உருவாகி ஒரே சமயத்தில் கலைக்கப்படும்.


(ஆ) ஜனதிபதி- இரு சபைகளின் கூட்டுக் கூட்டத்தில்

### உயர் நீதிமன்றம் ஆகியவற்றின் நீதி பரிபாலனம்

இரு கோர்ட்டுகளுக்கும் '[illegible]' கட்டளை பிறப்பிக்க அதிகாரமுண்டு. அல்லது சுப்ரீம் கோர்ட் அப்பீலுடன் உயர் நீதிமன்றத்துக்கு இந்த உரிமை. கிரிமினல் அப்பீல் கேட்கும் உரிமை சுப்ரீம் கோர்ட்டுக்கு.

பிரிவி கௌன்சிலின் அதிகாரம் சுப்ரீம் கோர்ட்டுக்குண்டு. சட்ட சம்பந்தமாக உயர்நீதிமன்றம் பாரமளிக்கும் பிரச்னைகளையும் அரசி

# ரமழான் தூரொலி



"உனது சகோதரனின் முகத்திலே புன்னகையைச் சிந்திவிடுவது ஒருதருமமே. நன்மையை கடைப்பிடித்தொழுக ஏவுதலும் தருமம், தீமையை விலக்குவதும் தருமம். செல்லவேண்டிய வழிதெரியாது தடுமாறித் திரிபவனுக்கு உரியவழியை காட்டிக்கொடுத்தலும் தருமம், பர்வை பறிபோன பரதேசி மனிதனுக்கு உதவிபுரிதலும் தருமம். பாதசாரிகளுக்கு இடைஞ்சல்செய்யும் கற்களையும், முட்களையும், எலும்புகளையும் பாதையிலிருந்து அகற்றிவிடுதலும் தருமம், உன் வாளியிலிருக்கின்ற (நீர் போன்ற) தை உன் சகோதரனின் வாளியில் நிறைத்துக்கொடுப்பதும் தருமம் தான்." (நபிமொழி: கூறுபவர்: அபூதர்ரு. ஆதாரம்: திருமிதி)

தருமம் பற்றி நபிகள் நாயகம் போதித்த அமுதமொழிகளுள் ஒன்றே மேலுள்ளது. இது ஒரு சிறுவிஷயம்தானே என்ற உதாசீனப் போக்கினுல் நாம் சில தருமங்களைத் தவறவிட்டு விடுகிறோம். புன்னகையோடு நாம் ஒருவரிடம் உறவாடினுல் அவர் எமது கோபியாய் இருப்பின் அவரின் கோபம் எமது புன்னகையின் முன் சரணடைந்தேபோய்விடும். துன்பம் விளைவிக்கும் பொருட்களை பாதையிலிருந்தகற்றினுல் எத்தனை எத்தனையோ பேர் இடர்களிலிருந்து காக்கப்படுகின்றனரல்லவா? கண் தெரியாக் கபோதிக்கு உதவுவதால் ஜீவன்பேரில் காருண்யம் காட்டுகின்ரேமல்லவா?

வழி தெரியாது நிற்கும் சில மனிதர்களை தங்களின் வாகனங்களில் ஏற்றி அங்கும் இங்குமாக அலைந்து திரிந்து இறுதியில் அதிக பணம் பறிக்கும் சிலசாரதிகள் இனிமேலும் அப்படிச் செய்யாது உரிய வழியைக் காட்டிக்கொடுத்தார்களாளுல் தருமத்தைக் கடைப்பிடித்தவர்களாவார்கள். பொதுவாக, ஒவ்வொருவரும் பிறருக்கும் பயனுடையவர்களாக ஆகும்போது கர்மம் பிறக்கிறது. இடருடையவர்களாக ஆகும்போதுகர்மம் பிறக்கிறது நாம் அனைவரும் தருமத்தைக்கடைப் பிடிப்போமாக.

அஸ்ஸலாமு அலைக்கும்.

வழங்குபவர்: மௌலவி ஏ. எம். ஏ ஹசன் [கபூரி]

தொழுகை நேரங்கள்:-

| சுபஹு | உதயம் | ளுஹர் | அஸர் | மஃரிப் |
|---|---|---|---|---|
| 4-41 | 6-01 | 12-20 | 3-19 | 5-51 |
| | இஷா | | சஹர்முடிவு | |
| | 7-11 | | 4-26 | |

திரு. எம் சி. [illegible]பிரமணியம் பிரதம மந்திரி திருமதி சிறிமா பண்டாரநாயக்காவுக்கு தந்திச் செய்தி யொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

பொலிஸ் அட்[illegible]யம் பற்றி கேள்வியுற்ற சம்பவம் நடந்த இடத்துக்கு போய் பார்த்ததாகவும்13-ம் திகதி காலையில் சிறுபான்மை இனத்தைச்சேர்ந்த இளைஞர் ஒருவர் குத்திக் கொல்லப்பட்டுள்ளார் என்றும் திரு. சுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.

"சிறுபான்மை இனத்தைச்சேர்ந்த பெண்கள் அழுதுகதறியபடிதங்களுக்கு நேர்ந்த கொடுமைகள்பற்றி கூறினுர்கள், பொலிசாரின் அக்கிரமம்தாங்கமாட்டாமல் சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த ஆண்கள் வீடுவாசல்களை விட்டு ஓடியிருக்கிருர்கள் பெண்களை இரவு

றோமன் கத்தோலிக்க

## சமயவிவகார ஆய்வுரைக் குழு

பொரளை. ஞாயிறு

றோமன் கத்தோலிக்க சமயம் சம்பந்தமான விபரங்கள் பற்றி கலாச்சார விவகார அதிபருக்கு ஆலோசனைகளை நிறுவுவதற்காக றோமன் கத்தோலிக்க சமய விவகார ஆய்வுரைக் குழுவொன்றை கலாச்சார அலுவலக அமைச்சர் நியமித்துள்ளார்.

இக்குழு மூன்று வருடகாலத்துக்கு இயங்கும். இக் குழுவில் மேற்றிராணியார் ஓஸ்வால்ட், கோமிஸ், அதி வண டபிள்யூ எல் ஏ. டொன்பீற்றர், வண பிதா டபிள்யூ டொன் சில்வஸ்ரர் வணபிதா ஹென்றி பொன்னையா, வணபிதா ஏணஸ்ட் போறுதொட்ட வணபிதா மைக்கல் ஞாசோனு, வண பிதா என், எம். சவரிமுத்து சங். சகோதரர் திமத்தி கொலமுன்ன, சங் சகோதரி மேரி யேசெவ் (ஆர். ரி. எஸ்,) சங் சகோதரி மேரி விட்வினு (ஏ. சி) திரு ஜீ. ஐ. ஓ: எம் குருகுலசூரிய, திரு ஐ டி. பேர்டினன்ஸ், திரு லெஸ்லிபர்னந்து, திரு எவ் எக்ஸ் ஸி நடராசா, திரு ஜே. டி. மத்தாயஸ் ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

இக் குழுவினர் அண்மையில் பொரளையிலுள்ள அதி மேற்றிராணியார் இல்லத்தில்கூடி இலக்கியம் சம்பந்தமான ஒரு போட்டியை நடாத்தி சிங்களத்திலும் தமிழிலும் 10 சிறுகதைகளை எழுதுவோருக்கு பரிசில்கள் வழங்குவதென தீர்மானித்தனர்.

# சாரதி மரணம்

யாழ்ப்பாணம், திங்கள்

வயலில் ஆழ்ந்துபோன உழவு யந்திரத்தை மீட்பதில் ஈடுபட்ட சாரதி நசுங்கி மரணமானுர். இச் சம்பவம் கிளிநொச்சிப் பகுதியில் வட்டக்கச்சியில் நடைபெற்றது.

ஊரியான் பயிர்ச் செய்கைக் குழுவின் குமாஸ்தாவாகக் கடமையாற்றும் 24 வயது எஸ் இராசு என்பவர் தமது உழவு யந்திரதாதில் வயலில் உழுதுகொண்டிருக்கையில் யந்திரத்தின் சக்கரங்கள் சேற்றில் புதைந்து போனதாகவும், மரக் கட்டைகளை அணைக் கொடுத்து யந்திரத்தை வெளியில் எடுக்க முயற்சி செய்த போது யந்திரம் அவர்மீது கவிழ்ந்து விழ்ந்ததகவும், அதனுல் அவர் நசுங்கி மரணமானதாக மரணவிசாரணையில் தெரியவந்தது. விபத்து மரணம் என்று தீர்ப்பளிக்கப் பட்டது. (கு வி ம)

— —

## "முருகன்புகழ் பாடி அவன் அருள்பெறுவோம்"

சுழிபுரம், ஞாயிறு

'சகல செல்வங்களும் பெற்று பெருகும்சிறப்புடன் வாழும் ஒருவன் கிடைத்த செலவத்தைக் கொண்டு பெரும் வாழ்வு வாழவும் சிறப்புடன் மேன்மையடையவும் இவ்வுலகில் பல நல்லறங்களைச் செய்யவேண்டும் ஆலய தரிசனம் எமது வாழ்வுக்கு ஓர் கிடைத்தற்கரிய பேருகும். சிறப்பாக முருகதரிசனம்செய்வது எல்லோர்க்கும் இலகுவில்கிடைத்தற்கூடியதாகும், அழகுத் தெய்வம் முருகன் அள்ளிக் கொடுப்பவன் முருகன் முருகன் புகழ்பாடி அவன் அருள் பெறுவதே நாம் அடையும் பயனுகும்" இவ்வாறு சுழிபுரம் பறுளை சிவசுப்பிரமணிய சுவாமி கோவிலில் நடைபெற்ற கார்த்திகை விழாவில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றிய சுழிபுரம் ஐக்கிய சங்க வித்தியாசாலை அதிபர் பிரம்மஸ்ரீ சு. சண்முகரத்தினசர்மா பேசுகையில் குறிப்பிட்டார்.

தொடர்ந்து அவர் பேசுகையில் மாதம் தோறும் கார்த்திகை விழா சிறப்புடன் நடைபெற்று வருகின்றது. ஜோதியாக விளங்கும் பெரும் விளக்காக பிரகாசிப்பவனை இறைவன் அவன் ஆழகிய ஜோதியை முருக ஆலயங்களிலே காணலாம் என்ருர்.

### பஸ்சேவை சீர்கேடு பற்றி புகார்

தாவடி, ஞாயிறு

"சங்கானையில் இருந்து புறப்பட்டு மானிப்பாய் ஊடாக யாழ்ப்பாணம்செல்லும் பஸ்வண்டி ஒருமாத காலமாக சேவையில் ஈடுபடாத காரணத்தால், பிரயாணிகள் மிகவும்அவதியுறுகின்றனர். அத்துடன் பாடசாலை பஸ்ஸும் கிரமமாக ஓடுவதில்லை. இதனுல் பாடசாலைக்குச் செல்லும் பிள்ளைகள் பாடசாலைசெல்லாமலே வீட்டுக்குத் திரும்புகின்றனர்" என்று சங்கானைப் பஸ் பிரயாணிகள்சங்கம் வட்டுக்கோட்டை எம் பிக்கும், பட்டின சபைக்கும் கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளது.

······

## தேசம் முழுவதுக்கும் உரியவர்

சென்னை, நவ 15

காந்தி, நேரு போன்றவர்கள் காங்கிரஸ் கொடியின் கீழ் பாடுபட்ட போதிலும் தேசம் முழுவதற்கும் உரியவர்கள் அவர்களை எல்லாக் கட்சிகளுமே மதிக்கவேண்டும். இதன் அடிப்படையிலேயே திராவிட முன்னேற்றக் கழகம் இத்தலைவர்களை தேசியவீரர்களாகப்போற்றி விழா வெடுத்துவருகின்றது என்று தமிழ்நாடுமுதலமைச்சர் திரு. மு. கருணுநிதி கூறினுர்.

நேற்று சென்னையில் அனைத்துக்கட்சிகளும் கலந்து கொண்ட நேரு நினைவு விழாவில் அவர் பேசினுர்.

(8-ம் கலத்தொடர்ச்சி)

எவ்வளவு! பல அரிய கலைஞர்களையும், அறிஞர்களையும் பெற்றுத் தந்துள்ள அளவெட்டி, ஆத்மீகத்தையும் நல்ல முறையில் வளர்க்கின்றது. அளவெட்டியும் அங்குள்ள மக்களும் வாழ்க!

0 0 0

மனைவி தாய் தந்தை மக்கள் மற்றுள சுற்றமெனும், வினையுளே விழுந்தழுந்தி வேதனைக் கிடமாகாதே கனையுமா கடல்சூழ் நாகைமன்னு காரோணம் தன்னை நினையுமா வல்லீராகில் உய்யலாம் நெஞ்சினீரே.

—அப்பர் அடிகள்.

இளம் அமெரிக்கர் ஆண்களும் பெண்களும் இதில் சேர்ந்து படிப்பதாகவும், சைவ உணவு, பிரம்மச்சரியம் முதலிய கட்டுப்பாடுகள் உண்டென்றும் தெரிவித்தார். தியானத்துக்காகவே ஒருசர்வகலாசாலையை அமைத்து, கட்டுப்பாடாக பயிற்சி அளிப்பதைக் கேட்க வியப்பாக இருந்தது.

பின்னர், அவரும் அவரது சிஷ்யர்களும் சேர்ந்து 'ஓம்' என்ற நாதம் எழுப்பியது, கேட்டோர் உள்ளமெல்லாம் புகுந்து சற்றே மெய் மறக்கச் செய்தது. தியான முறைகளையும், அவற்ருல் ஏற்படும் அனுபவங்களையும் அந்த அமெரிக்க சாது தெளிவாகச் சொல்லக் கேட்டதும், சில வருடங்களில் அல்ல, இப்போதே அமெரிக்கர் நமக்கு யோகக்கலையையும், ஆத்மீகத்தையும் போதிக்க ஆரம்பித்துவிட்டதை உணர்ந்தேன்.

எந்த விஷயத்தில் அவர்கள் ஈடுபட்டாலும், முழுக் கவனத்தையும், மனதையும் அதில் செலுத்தி, ஒரு திட்டம் வகுத்து அதன்படி காரியங்கள் செய்கிருர்கள். அமெரிக்க வாலிபர்களின் மனம் புதிய ஆத்மீக வழியில் அதிகம் செல்வதாயும், இதற்காகவே "அந்தர்முக ஆராய்ச்சி" சுற்றுப்பிரயாணம் செய்வதாகவும் அறிந்தேன். ஆத்மீக வழியில் தான் உண்மை இன்பம் உண்டென்பதையும் உலகப் பிரச்னைகள் எல்லாம் அதன் மூலம் தான் தீரமுடியும் என்பதையும் வாலிப அமெரிக்கர் வரவர அதிகமாக உணர்ந்துவருகிறதாம்.

வந்திருந்த அமெரிக்கப் பெண்கள், நம் பெண்கள் போலவே உடுத்தி தொண்டு செய்தனர்.

0 0 0

அளவெட்டியைச் சேர்ந்த பெரியார் சி. கந்தையா செட்டியார் தான் இந்த அமெரிக்கச் சாதுவை யோகர் சுவாமிகளுக்கு முதல் முதல் அறிமுகம் செய்து, ஞான தீட்சை பெறக் காரணமாய் இருந்தவராம். இந்த நிகழ்ச்சிகளுக்கு அவரே நல்ல ஒழுங்கு செய்திருந்தார்கள். பல அன்பர்களின் இன்னிசையும், சிறப்பாக இருவர் சேர்ந்து வேதபாராயணத்தை முறைப்படி செய்ததும், அமெரிக்கரின் மனதையும் பெரிதும் கவர்ந்தது.

அன்றைய மாலை நிகழ்ச்சியில் பெற்ற இன்பத்தை என்னுல் என்றும் மறக்க முடியாது. சத்சங்கத்தால் ஏற்படக்கூடிய நன்மைதான்

(7-ம் கலம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org